மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

மணி 2 • 17-4-60 • விலை 16 காசுகள் • ஒலி 24

என் அண்ணனுக்கும், எனக்கும் துளியும் பகையில்லை! வயிறு வளர்க்க— இப்படி கயிறு திரிக்கிறார்கள் !

வளர்ந்த நம்மைத் திட்டினால் தான் அவர்கள் வாழ்வு வளரும்!

குடும்பம் வளர நாங்கள் பாடுபடுகிறோம் ; அதைச் சண்டை என்று வர்ணிப்பது அற்பத்தனம், அறிவின்மை !

சொல்லின் செல்வர் சம்பத் விளக்கம்

[சென்னை பெத்து நாயக்கன் பேட்டை மக்கள் மன்றத்தின் சார்பில் 9-4-60ம் தேதி மாலை 6-30 மணிக்கு ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.]

வரவேற்பு

இக் கூட்டத்தில் பேசுவதற்காக டில்லி பாராளுமன்ற உறுப்பினரும், கழகத்தின் தலைவர்களில் ஒருவருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் டில்லியிலிருந்து அன்று பிற்பகல் சென்னை வந்து சேர்ந்தார்.

தோழர் சம்பத் அவர்களை நகரிலுள்ள பலகிளைக் கழகத் தோழர்களும், இப்பக்கத்தில் பன்னெடுங்காலம் பணியாற்றிவரும் முக்கிய தோழர்களும் வரவேற்று மலர் மாலையும், கைத்தறி ஆடையும் அணிவித்து வரவேற்றார்கள்.

தோழர் சம்பத் அவர்கள் வரவேற்ற தோழர்கட்கு நன்றி தெரிவித்தார்.

புகை வண்டி நிலையத்தில் வரவேற்ற முக்கியமானவர்கள் வருமாறு:—

தோழர்கள் சிவஞானம், கே. கோவிந்தசாமி, டாக்டர் சி. கணேசன், பஞ்சாட்சரம், கிருஷ்ணசாமி மக்கள் மன்றத்தைச் சார்ந்த கணேசனும் மற்றவர்களும் நகரமன்ற உறுப்பினர் ராமதாஸ், ஏ. கண்ணப்பன், நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் கிளைக்கழக உறுப்பினர்கள், ஏ. எஸ். ராமன், 4வது வட்டம் சேதுராமன், 2வது வட்டம் தினகர், 3வது வட்டம் சுந்தரம் ஆகியோர்களும், மற்றும் ஏராளமானவர்கள்.

கூட்டம் ஆரம்பமானதும் மன்றத்தின் துணைத்தலைவர் தோழர் கணேசன் கூட்டத்தின் நோக்கம் பற்றியும், மன்றத்தின் பணிகளைப் பற்றியும். தோழர் சம்பத் அவர்களைக் கொண்டு கூட்டம் நடத்துவதன் நோக்கம் பற்றியும் விளக்கமாகப் பேசிவிட்டு, தோழர் இரா. முத்துகிருஷ்ணனை தலைமை வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தோழர் சம்பத் அவர்களுக்கு பல நிறுவனங்களின் மூலம் கைத்தறி துண்டுகள் அணிவிக்கப்பட்டது.

தலைவர் முத்துகிருஷ்ணன் தலைமை வகித்து முன்னுரையாகப் பேசிய பின் தோழர் சக்கரபாணி பேசும் போது 4 ஆண்டுகளாகச் செய்து வரும் பணிகளைக் குறித்தும், முன்னேற்ற கழகத்தை காங்கிரஸ் தலைவர்களும் அமைச்சர்களும் அழிக்க எண்ணுவதைப்பற்றியும், சென்னை...செங்கற்பட்டு மாவட்டங்களில் அரசினர் கழகத் தோழர்கள் மீது பழிவாங்க நினைத்து செய்து வரும் தொல்லைகளையும் விளக்கினார்.

பின்னர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் நீண்ட கை தட்டலுக்கிடையே பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே அருமை நண்பர்களே தாய்மார்களே!

இந்த மக்கள் மன்றத்தின் சார்பில் நான் ஒரு கூட்டத்தில் பேச வேண்டுமென்று பல நாட்களாக

(3ம் பக்கம் பார்க்க)

மாலைமணி
ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 17-4-60 — ஒலி 24

உச்ச வரம்பு ஏழைகளுக்குப் பயன் தருமா?

"இன்று வருகிறது, நாளை வருகிறது" என்று பல ஆண்டு காலமாக சொல்லி வந்த நில உடமை உச்சவரம்பு சட்டம் இப்போது சென்னை சர்க்காரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது! இதற்காக சென்னை சர்க்காரையும், கனம் அமைச்சர் மாணிக்க வேலரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்!

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற நில உடமை உச்சவரம்பு மசோதாவை ஒருவரி கூட விடாமல், பல முறை படித்துப் பார்த்தோம்! திரும்பத் திரும்பபடித்துப் பார்த்தோம்! எத்தனை முறை படித்தாலும் "இன்னும் ஒரு ஐந்தாண்டு காலத்திற்கு பதவியை விட்டு ஓடாமல் இருக்க சரியான வழியை தேடிக் கொண்டிருக்கிறார்கள்" என்ற கருத்தைத் தான் நாங்கள் புரிந்து கொள்ள முடிகிறது!

இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற உச்சவரம்பு சட்டம் யாருக்கு பயனளிக்க வேண்டுமோ அவர்களுக்குப் பயனளிக்கவில்லை! யாருக்கு வாழ்வளிக்க வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்கவில்லை! இந்த சர்க்காருக்கு வேண்டுமானால் இந்த சட்டம் வாழ்வளிக்குமே தவிர ஏழைகளுக்கு, ஏழை விவசாயிகளுக்கு ஒரு துளியும் வாழ்வளிக்காது என்பதை ஒவ்வொரு விவசாயியும் உணர்வான்!

"ஏன் ஏழைகளுக்கு வாழ்வளிக்கவில்லை? பெரும் பெரும் நிலப்பிரபுக்களின் பல்லைப் பிடுங்கி, அவர்களின் கொட்டத்தை அடக்கிவிட்ட பின்பு எப்படி ஏழைகளுக்கு வாழ்வு வராமல் போகும்" என்று சில காங்கிரஸ் மேதைகள் கேட்கக் கூடும்! இந்த கேள்வி ஓட்டு வேட்டையாட வேண்டுமானால் உதவுமே தவிர ஏழைகளின் உள்ளத்தை குளிர வைக்க ஒரு துளியும் பயன்படாது!

புலியை கூண்டிலே அடைத்து பூட்டி விட்டால் புள்ளி மானுக்கு வாழ்வு கிடைத்து விட்டதாக சொல்லுவது அறியாமையாகும்! புலியினால் வரும் ஆபத்து வேண்டுமானால் ஒழியுமே தவிர புள்ளிமானுக்கு வாழ்வு ஒருக்காலும் கிடைக்காது!

இதை ஒவ்வொரு ஏழை விவசாயிகளும் உணர வேண்டும்! "நிலச் சட்டம் வந்து விட்டது, நிலச் சட்டம் வந்து விட்டது" என்று கூறி மகிழ்ந்தால் நீங்கள் நிச்சயமாக ஏமாந்த சோணகிரிகள் என்ற பட்டத்தைத் தான் பெறுவீர்கள்!

சேவல் கூவி, செங்கதிர் கிளம்புவதற்கு முன்பு எழுந்து, பகலெல்லாம் பாடுபட்டு, கடும் வெய்யலில் வியர்வை சிந்த உழைத்து கோட்டான் கத்திய பின்பு வீடு திரும்பும் பாட்டாளி மக்களே! இந்த உச்சவரம்பு நிலச் சட்ட மசோதாவை பலமுறை படித்துப் பாருங்கள்! உங்களுக்கு அதில் என்ன பயனிருக்கிறது என்பதையும் கொஞ்சம் சொல்லுங்கள்!

சர்க்கார், இந்த சட்டத்தை ஏழைகளுக்காக கொண்டு வரவில்லை, பணக்காரர்களுக்கு பாதுகாப்பளிக்கத்தான் கொண்டு வந்திருக்கிறது! இல்லா விட்டால் இந்த சட்டத்தை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே கொண்டு வந்திருக்க வேண்டும்!

"நிலச் சட்டம் வருகிறது, நிலச்சட்டம் வருகிறது! பெரும் நிலம் படைத்தவர்களே! ஜாகரதை, ஜாக்ரதை என்று கூறி அவர்களுக்கு முன்னெச்சரிக்கை தந்திருக்கிறது! காரணம் என்ன?

சர்க்கார் தந்த இந்த எச்சரிக்கைக்குப் பின்பு பல நிலக்கிழார்கள் தங்கள், தங்கள் நிலங்களை யெல்லாம் கிரயம் செய்து, பச்சை நோட்டுகளாக மாற்றி இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்து விட்டனர்! பல பேர் பந்துகளுக்கு பட்டா செய்து வைத்து விட்டனர்! சில பேர் தங்கள் குடும்பங்களை பாக்கிஸ்தானுக்கிக் கொண்டு விட்டனர்! முடிவில், நிலச சட்டம் வருகின்ற இந்த நேரத்தில் அவர்களிடம் மிஞ்சி இருப்பது உச்சவரம்புக்குக்கீழ் தான் என்பதை எல்லோரும அறிவார்கள்!

பொதுவாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! அங்குள்ள பெரும் நிலக்கிழார்களுக்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எத்தனை ஏக்கா நிலமிருந்தது, இப்போது எத்தனை ஏக்கர் நிலமிருக்கிறது என்பதைப் பற்றி ஒரு குறிப்பெடுத்துப்பாருங்கள்! இந்த சர்க்கார் செய்துள்ள ஜாலவித்தை மிகத் தெளிவாகப் புலப்படும்!

வடபாதி மங்கலத்தாருக்கு அன்று எத்தனை ஏக்கர்? இன்று எத்தனை ஏக்கர்?

குன்னியூர் முதலாளிக்கு அன்று எத்தனை ஏக்கர்? இன்று எததனை ஏக்கர்?

காங்கிரஸ் கட்சியின் செல்லப்பிள்ளை நெடும்பலத்தாருக்கு அன்று எததனை ஏக்கர்? இன்று எத்தனை ஏக்கர்?

ஆத்தூர் சுப்பிரமணியத்திற்கு, கூத்தனூர் ராமமூர்த்திக்கு, கபிஸ்தலம் மூப்பனாருக்கு, உக்கடை தேவருக்கு, பூண்டி வாண்டையாருக்கு, அன்று எத்தனை ஏக்கர்? இன்று எத்தனை ஏக்கர்? கணக்கிட்டுச் சொல்ல முடியுமா? சொல்வீர்களா?

சரி, போனது போகட்டும்! இவர்களுக்கு மிச்சமுள்ள நிலத்தை வரம்புகட்டுகிறீர்கள்—வரவேற்கத்தக்கது தான் எதிர்க்க ஒருநாளும் முன் வரமாட்டோம்!

வடபாதி மங்கலத்தாரின் நிலங்களுக்கு உச்சவரம்பு கட்டினால் அங்குள்ள வடிவேலுவுக்கு ஏதேனும் பயன் கிடைக்குமா?

குன்னியூருக்கு உச்சவரம்பு கட்டினால் அங்குள்ள குப்பனுக்கு ஏதேனும் பலன் கிடைக்குமா? இல்லை என்றால் இந்த உச்சவரம்புக்கு என்ன அவசியம்?

உச்சவரம்பு கட்டுவது என்பது அவசியம் தான்! எதற்கும் ஒரு எல்லை வேண்டும் என்பதையாரும் மறுக்க முடியாது! காங்கிரஸ்காரர்களைவிட நாங்கள் தான் உச்சவரம்பு வேண்டுமென்று பல காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறோம்! ஆனால் உச்சவரம்பு என்பது சொத்துக்கு எல்லை வகுத்தால் மட்டும் போதாது சொத்து இல்லாதவர்களுக்கு சொத்தும் அளிக்க வேண்டும்!

உபரி நிலங்களை சர்க்கார் நஷ்ட ஈடு கொடுத்து வாங்கிக் கொள்ளும் என்று மசோதா கூறுகிறது!

சர்க்கார் எடுத்துக் கொண்ட நிலங்களை எப்படி பகிர்ந்து அளிக்கும் என்பதற்கு தெளிவு ஏதும் இல்லை! என்றாலும் நில மில்லாதவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படும் என்று கூறப்படுகிறது!

இதை நிறை வேற்றித்தருகின்ற முறையில் தான் சர்க்காருக்குள்ள மனப்பான்மையை நாம் பூர்ணமாக அறிந்து கொள்ள முடியும்!

இதுவரையில் ஒரு சிலரிடமே நிலம் முடங்கிக்கிடந்த காரணத்தாலோ, அல்லது உச்சவரம்பு கட்டாத காரணத்தாலோ பெரும்பாலான விவசாயிகளுக்கு சொந்தத்தில் நில மில்லை என்று கருதக்கூடாது! பெரும்பாலான விவசாயிகளுக்கு நிலமில்லாத காரணம் நிலம் வாங்கி, சொந்தத்தில் பட்டாவைத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்களிடம் பொருளாதாரமில்லை! பணமில்லாத காரணத்தால் தான் பலருக்கு நிலமில்லை என்பதையும் சர்க்கார் உணரவேண்டும்!

எனவே உபரி நிலங்களை கூடியவரையில் எல்லா ஏழை விவசாயிகளுக்கும் பொருளாதார நிலை பாதிக்கபடா வண்ணம் பகிர்ந்தளிக்க வேண்டும்!

பெரும் நிலம் படைத்தவர்களிடமிருந்து பெறப்படும் உபரி நிலங்களுக்கு சர்க்கார் நஷ்ட ஈடு தராமல் உபரி நிலங்களை சர்க்கார் பெறுமானால் நிலமில்லாத விவசாயிகளுக்கு இலவசமாகவே நிலம் வழங்கலாம்!

உழைக்கும் விவசாயிகளிடம் நிலம் மாறுமானால் உணவு பெருக்கமும் அதிகமாகும்! இதனால் உணவு பஞ்சமும் குறையும்!

(11-ம் பக்கம் பார்க்க

வீரர்களே தியாகம் செய்யப் புறப்படுங்கள்!

நாம் எத்தனை பேர் இருந்தோம்; எத்தனை பேர் இறந்தோம்; என்ற பட்டியலே நமக்குத் தேவை

(சம்பத் பேச்சு)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னைக் கேட்டார்கள். நான் தேதி தருவதாகக் கூறி வந்தேன்.

அடுத்து, அடுத்து என்னைக் கேட்டு வந்தார்கள்.

இந்த மன்றத்தைச் சார்ந்த தோழர் கணேசன் அவர்கள் டில்லிக்கு வந்த போது என்னிடம் தேதி கேட்டார்கள் இப்பொழுதுதான் சந்தர்ப்பம் ஏற்பட்டது,

1956ம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் இந்த ஆண்டுவிழா நடைபெற்றது. அதில் நான் கலந்து கொண்டேன்.

4 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் இங்கு வந்து பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 4 ஆண்டுகளில் இந்த மன்றம் நல்ல பல பணிகளைச் செய்து வந்திருக்கிறது.

திறமையான பல பணிகளைச் செய்து வந்திருக்கிறது. இந்த மன்றத்தைச் சேர்ந்த நண்பர்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வத்தால் செயலில் பல அருமையான காரியங்களைச் செய்து வருகிறார்கள் விருப்போடும், அன்போடும் பணியாற்றி வரும் நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் மிகவும் மகிழ்கிறேன்.

இந்த பெத்து நாய்க்கன் பேட்டை மிகவும் புனிதமான இடம் சரித்திர பிரபலமான இடம் இங்கு இருக்கின்ற வாலிபர்கள் பல கடுமையான எதிர்ப்புகளுக்கிடையிலும், ஏசல்களுக்கிடையேயும் பணியாற்றி வருகிறார்கள்.

இந்தி எதிர்ப்பு காலத்தில் இந்தப் பேட்டை தான் வழிகாட்டியாக இருந்து வந்தது அதோடு இந்தப் பேட்டைக்கும் நமது அறிஞர் அண்ணா அவர்களுக்கும் அதிகமான தொடர்பு இருந்து வந்தது. அப்படிப்பட்ட இந்தப்பேட்டையில் இந்த மன்றம சீரிய முறையில் பெருமையுடன் பணியாற்றி வருவதைக் கண்டு உள்ளபடியே மகிழ்ச்சி யடைகிறேன்.

இந்த மன்றத்தார் தினமும் சுமார் 300 குழந்தைகளுக்கு மேல் பால் வழங்குகிறார்கள் என்பதை அறிந்து மிகவும் பூரிப்படைகிறேன்.

அமெரிக்காவிலிருந்தும், மற்றும் பலநாடுகளிலிருந்தும் இங்கு பால் பவுடர் அனுப்புகிறார்கள். ஆனால் அந்த மாதிரி பல மைல்களுக்கப்பாலிருந்து இங்கு அனுப்பப்படும் பால்பவுடரை பலர் சரிவர உபயோகப்படுத்துவதில்லை. அந்தப் பவுடர் பல இடங்களில் மக்களுக்குப் பயன் படாமல் கதருடைக்குள் புகுந்து விடுகிறது. பின் கடைகளில் விற்று லாபமடைகிறார்கள்.

எனக்கு முன் பேசிய நண்பர் சக்கரபாணி பேசுய போது,

'திடீர் என்று பெரிய பதவியை ஏற்றிருப்பவர், நம்மை இழிவாகவும், குறைவாகவும் பேசி வருவதாகக் கூறினார். நான் இங்கு வந்ததும், பலர் பலவிதமாக என்னிடம் சொன்னார்கள். நான் கூட அவர்களா இப்படிப் பேசுகிறார்கள் என்று எண்ணினேன்.

பாராளுமன்றத்தில் எப்பொழுதும், மாலை 6மணி முதல் 6-30 வரை விவாதம் நடைபெறும் பெரும் பாலும், ஐந்து உறுப்பினர்கள் அதில் கலந்து கொள்ள மாட்டார்கள். ஆனால் நான் மட்டும் யார் விவாதம் நடந்தாலும் நான் அதைக் கடைசிவரை உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பேன். அன்று நான் விவாதத்தில் கலந்து கொண்டேன். நான் அங்கு அமைச்சரிடம் கேட்டேன், காங்கிரசில் பெரிய மனிதராக உள்ள ஒருவர், தனது மனைவி சமுதாய நலத்திட்டப் பணியில் தலைவியாக இருப்பதால், அவரது சொந்த பங்களாவிலேயே போர்டை மாட்டிக் கொண்டு சர்க்காரிடமிருந்து வாடகையை எடுத்துக் கொள்வதும், தனது தோட்டக்காரனை ஆபீஸ் பணியாளனாக இருக்கச் செய்து சர்க்காரிடம் வாங்கிக் கொடுப்பதும் உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டேன்.

அதற்கவர் "நீங்கள் மிகவும் கடினமான வார்த்தைகளை உபயோகிக்க மாட்டீர்களென்று எண்ணினேன். அதற்கு மாறாகக் கடினமான வார்த்தைகளை உபயோகிறீர்களே என்று கூறி விட்டு சும்மா இருந்து விட்டார்.

ஆகவே பொது மன்றங்கள் எப்பொழுதும் நாணயமான முறையில் சேவை செய்ய வேண்டும். மக்கள் நலனுக்கான பணிகளில் ஈடுபட வேண்டும்.

பொய்யான முறையில் பாலை விநியோகிப்பவர்களுக்குப் புத்தி வரும்படி மக்களுக்கு செய்வதுடன் மெய்யான முறையில் பாலை விநியோகிக்க வேண்டும்.

கூட்டங்கள் நடத்துவதனாலேயே தங்களது பணி முடிந்து விட்டதென்று மன்றங்கள் எண்ணக் கூடாது. ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும்.

மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட வேண்டும். மக்கள் வாழ்க்கை நிலையை உயர்த்துவதில் கவனம் செலுத்த வேண்டும். வெறும் அலங்காரப் பேச்சுகள் பேசிக் கொண்டிருப்பதாலோ, ஆர்வ மிக்கச் சொற்கள் கூறிக் கொண்டிருப்பதாலோ மன்றங்களின் வேலைகள் தீர்ந்து விட்டது என்று எண்ணக் கூடாது.

எனக்குத் தெரியும் பல மன்றங்களான பல நாள் தூங்கிக் கொண்டே இருந்து விட்டு பொங்கலுக்கு முதல் நாள் நினைப்பார்கள் விழாக் கொண்டாட வேண்டுமென்று ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் வசூல் செய்து, அலங்காரங்கள் செய்து பெரிய கூட்டம் போட்டு விடுவார்கள்.

வாண வேடிக்கைக் காட்டுவார்கள். ஊர்வலம் வருவார்கள் இப்படிச் செய்வதால் மட்டும் அவர்கள் பணி தீர்ந்து விட்டதா? இதனால் யாருக்கு நன்மை?

இதனால் மக்களது அன்றாட தேவைகள் பூர்த்தியாகி விடுமா? மக்களுக்கு அன்றாட தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக நினைத்துவிட முடியுமா?

அமெரிக்கா, சோவியத் ரஷியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் ஒருவனுடைய நிலைமையை அவனுடைய ஒழுக்கத்தை உணர்வதற்கு அவனுடைய சமூக சேவையைத் தான் கவனிப்பார்கள்.

மேல் நாடுகளில் ஒருவன் மீது குற்றம் சாட்டி நீதி மன்றத்திற்கு அழைத்து வந்து குற்றக் கூண்டில் நிற்க வைத்து நீதிபதி பல கேள்விகள் கேட்பார் அதாவது – சத்தியம் செய்வது, ஜாதி மதம், வயது போன்றவைகள். கேட்பார்கள் அதோடு முக்கியமாகக் கேட்பது 'உன்னுடைய சமூகப் பணியென்ன?

எந்த மன்றத்தில் தொடர்பு கொண்டிருக்கிறாய் என்று கேட்பார் அதிலிருந்து நீதிபதி அவனிடம் இரக்கம் காட்டி தண்டனையைக் குறைப்பார்.

இங்குகூட பார்க்கலாம் ஒரு பெரிய மனிதன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டால் அவன் 1000 ரூபாய் வருமானவரி கட்டுகிறேன், 500 ரூபாய் விற்பனை வரி கட்டுகிறேன். என்பவைகளைத் தெரிவித்து குற்றத்திலிருந்து தப்பித்து விடுவான்.

சமுதாய சேவையில் எல்லோரும் ஈடுபட வேண்டும். மக்களின் நல்வாழ்விற்காக அனைவரும் பாடுபட வேண்டும்.

ஆலைகளில் வேலை செய்பவர்களானாலும் சரி, பள்ளிகளில் பணிபுரிபவர்களானாலும் சரி ஓய்வு நேரங்களில் மக்கள் பணிகளில் ஈடுபட வேண்டும், பல மன்றங்களில் பங்கு கொள்ள வேண்டும்.

சமீபத்தில் டில்லியில் மாநில முதலமைச்சர்கள் மாநாடு கூடியது. அந்த மாநாட்டில் ரயில்வே விவகாரங்களைக் கவனிக்கவும் 3வது ஐந்தாண்டுத்தில் ரயில்வே பாதைகளை புதுப்பிப்தற்காக ஆலோசனை செய்யவுமே இந்த மாநாடு கூட்டப்பட்டது.

டில்லி அரசினர் மாநில அரசினருக்குச் செய்த அநியாயங்களைப் பற்றி தென்னக முதல அமைச்சர்கள் வருத்தத்துடன் பேசினார்கள். பல திட்டங்களை எடுத்துரைத்தார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

முன்னேற்றப் பண்ணை வெளியீடு!

"தென்னகம்" ஆசிரியர்

கே. ஏ. மதியழகன் தீட்டிய

சம்பங்கிச் சருகு

கருத்தாழம் மிகுந்த கதைக் கருவூலம்!

சுவை சொட்டும் நடை! அழகிய கிலேஸ் பதிப்பு!

விலை ரூ. 1-50

வியாபாரிகளுக்குத் தக்த கழிவு உண்டு.

—: கிடைக்குமிடம் :—

மதுர நிலையம்

222, தம்பு செட்டித் தெரு, சென்னை-1.

உங்களின் பலத்தைக் கொண்டே அங்கு பணியாற்றுகிறேன்!

(சம்பத் பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ரயில்வே அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்கள் பேசும் போது கூறினர், “3வது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்ய வேண்டியதை 2ம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கான திட்டங்களைப் போடும் போதே முடிவு செய்யப் பட்டாகி விட்டது. அதைப் பற்றி ஒன்றும் இனியோசனை வேண்டாம்” என்று கூறினர். இதைக் கேட்ட முதலமைச்சர்கள் மிகவும் வருந்தினர்கள். மாநில அமைச்சர்களை மதிக்கவில்லை என்று கருதினர்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் இதைத்தான் பல ஆண்டுகளாகச் சொல்லி வருகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னகம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. தென்னகத்தைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை, சிறப்பாக தமிழகத்திற்கு எதுவுமே செய்யவில்லை என்று மக்களிடம் எடுத்துக் கூறி வருகிறது. இதைப் பார்த்து பலர் நம்மை கலகம் செய்து வருகிறோம் என்றுகூறி வருகிறார்கள்.

இங்குள்ளவர்கள் நம்மைப் பற்றித் தெரிந்து கொண்டதைவிட பன்மடங்கு, டில்லியிலிருப்பவர்கள் தெரிந்திருக்கிறார்கள். இங்குள்ள அமைச்சர்கள் கூட நம்மைக் காட்டித்தான் அவர்களது காரியங்களைச் சாதித்துக் கொள்கிறார்கள்.

ஏதாவது ஒரு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானல் இங்குள்ள அமைச்சர்கள் எங்கள் மாநிலத்தில் “திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் திட்டத்தை வைத்து கிளர்ச்சி செய்கிறது. போராட்டம் நடத்தப் போகிற தென்று கூறி அவர்களுக்குப் பயம் காட்டி காரியம் சாதித்து வருகிறது.

அதுமட்டுமல்ல டில்லியுள்ள அமைச்சர்கள் கூட ஏதாவது காரியங்கள் செய்யப் போகும் போது நமது கழகத்தை மனதில் நினைத்தே காரியங்கள் செய்து வருகிறது.

இங்குள்ள அமைச்சர்களுக்குச் சிறிது யோசனை இருந்தால் நம்மைக் காட்டி நம் வளர்ச்சியைக் காட்டி, பல காரியங்களை நமது மாநிலத்துக்குச் செய்யலாம்.

சமீபத்தில் பாராளு மன்றத்தில் திட்டக் குழுவில் அங்கத்தினராகவுள்ள ஒரு பாராளு மன்ற உறுப்பினர் ஒருவர் என்னைப் பார்த்து என்ன உங்கள் கழகம் ஐந்தாண்டு திட்டத்தைக் கண்டித்து கண்டன நாள் கொண்டாடுகிறதாமே இது என்ன அநியாயம் என்று கேட்டார்.

நான் அதற்குப் பதில் கூறினேன் “நீங்கள் கேள்விப்பட்டது உண்மை தான். அது மாத்திரமல்ல. ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்து கொடும்பாவி கட்டி கொளுத்தினர்கள். எங்கள் கழகத்தார்கள். அதற்கு நானே தலைமை வகித்தேன், அந்த உறுப்னர் மிகவும் அதிசயப்பட்டு இப்படியும் நடக்குமா என்று கேட்டார். வேண்டும் மானல் ஒரு முறை நீங்கள் வந்து பாருங்கள் செய்து காட்டுகிறோம் என்று கூறினேன். அங்குள்ளவர்கள் எதிர்ப்பைக் கண்டு தான் பயப்படுகிறார்கள் “மகுடி ஊதுவதால் மட்டும் மயங்கி விட மாட்டார்கள் நம்முடைய எதிரப்பின் சக்தியைக் கண்டு தான் அவர்கள் பயப்படுகிறார்கள்.

சமீபத்தில் கூட நமது அமைச்சர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் காட்டி, பத்து லட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள்.

முன்பெல்லாம் விண்ணப்பம் போட்டுக் கொண்டு பயபக்தியுடனிருந்த நமது அமைச்சர்கள் “தமிழகத்தில் துண்டாடும் தீய சக்தியினர்கள் மக்களை தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் வாயடக்க 10 லட்சம் வேண்டு மென்று கேட்டு பேற்றிருக்கிறார்கள்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முழு வெற்றியாகும்.

அது மாக்திரமல்ல டெல்லியில் நமது அமைச்சர்களுக்கு சுயமரியாதை இல்லாதிருந்தது. அந்த சுயமரியாதையை நமது முன்னேற்றக் கழகம் தான் பெற்றுத் தந்தது.

முன்பெல்லாம் நமது அமைச்சர்கள் டில்லிக்கு வந்தால் அங்குள்ளவர்களின் முன் எங்கு நிற்பார்கள். இன்று எங்கு நிற்கிறார்கள். அன்று நின்ற இடம் எது, இன்று நிற்கிற இடமெது இதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி இது இவர்களுக்குதான் லாபம்.

இன்று நெய்வேலியைப் பற்றிப் பெருமையாகப் பேசி வருகிறார்கள். அதன் வேலையைப் பற்றிப் புகழ்கிறார்கள். அதைப் பற்றி பெரும் கிளர்ச்சி செய்தது யார் நாமல்லவா நமது கழகமல்லவா.

நமது கழகமும், நாமுமில்லையானல் நெய்வேலி விஷயத்திற்கு பெரிய ஆபத்தல்லவா வந்திருக்கும். பாராளு மன்றத்தில் திட்டக் குழு அமைச்சர் சுவர்ண்சிங் அவர்கள் பேசும் போது நெய்வேலியில் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல ஆக்கவேலைகள் செய்யப் போவதாகவும் இப்போது நடப்பதை விட இரட்டிப்பான முறையில் வேலைகள் நடத்தப் போவதாகவும் கூறினர்.

உடனே நான் மேஜையைத் தட்டி வர வேற்றேன்

உடனே காங்கிரஸ் உறுப்பினர்கள் என்னைப் பார்த்து ‘ எல்லாம் உங்கள் இயக்கத்தைக் கண்டு தான் இங்குள்ளோர் பயப்படுகிறார்கள். ஏதாவது திட்டங்களைப் பற்றி விவாதிக்கும் போது கூட உங்கள் எதிர்ப்பு வந்து விடுமோ என்று அஞ்சுகிறார்கள். என்று கூறினர்கள்.

நம்முடைய வலிவு, நம்முடைய உணர்ச்சி, வளர்ச்சி இங்குள்ளோரைவிட அங்குள்ளோர் தான் அதிகம் தெரித்திருக்கிறார்கள்.

இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்கக் கூடாதென்று நாம் காலமாக எதிர்த்து வருகிறோம்.

அதே போன்று பல மாநிலத்தாரும் எதிர்க்கின்றனர். ஆனல் மற்ற மாநிலத்தாரின் எதிர்ப்பை விட நமது எதிர்ப்புக்குத் தான் மத்திய அரசினர் அதிகம் மதிப்புக் கொடுக்கிறார்கள். நம்முடைய எதிர்ப்புத்தான் வலிவுள்ளதாகக் கருதுகிறார்கள்.

அதற்கு உதாரணம் வேண்டுமானல் பண்டித நேரு மொழிப் பிரச்சினையில் நடந்து கொண்ட முறையைப் பார்த்தாலேயே நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

அரசியல் சட்டத்தில் இந்தி மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டு மென்று கூறுகிறது. அதற்கு விரோதமாக—அதிலுள்ள கருத்துக்குமாறுக அவர் கூறுகிறார்.

இந்தியை ஆதரிப்பவர்களின் கருத்தை அறிவதைவிட, அவர்கள் கூறும் ஆதாரத்தைக் கேட்பதைவிட இந்தி எதிர்ப்பாளர்களின் கருத்தைத் தான் ஏற்பேன் என்று கூறியிருக்கிறார். ஏன் அப்படிக் கூறினர். இதற்குக் காரணம் என்ன ?

நமது கழகத்தின் பணிதான் காரணம். நம்முடைய எதிர்ப்பு தான் காரணம். கேரளத்தில் எதிர்ப்பாள்ளர்கள் இருக்கிறார்கள் ஆந்திரத்தில் எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள், கன்னடத்தில் எதிர்ப்பவர்கள். இருக்கிறார்கள். இன்னும் பல மாநிலங்களில் எதிர்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எதிர்ப்பைவிட நம் எதிர்ப்பு தான் நேருவுக்குப் பயத்தைத் தருகிறது.

வங்காளத்தில் ஆட்சி மொழியை எதிர்க்கிறார்கள். அங்கு எதிர்ப்பு மாநாடு நடந்தது. நானும் சென்றேன். நேரில் பார்த்தேன். ஆனல இங்குள்ள எதிர்ப்பின் முறை, வீரம் அதற்குள் சக்தி இவைகள் அங்கில்லை. அதனல் தான்நேரு நமக்கு மதிப்புக் கொடுக்கிறார். அதனல் தான் சட்டத்திற்கு விரோதமாகக் கூட நடந்து கொள்கிறார்.

நமது அண்ணா அவர்களின் வீட்டில் ஒரு நாள் நானும், நமது பொதுச் செயலாளர் நெடுஞ்செழியனும், செழியனும் இருந்தோம். அப்போது ஒரு அழகிய கார் ஒன்று அண்ணா அவர்கள் வீட்டின் முன் நின்றது. “அது கவர்னரின் கார் என்று தெரிந்தது. ஏன் இந்தக் கார் இங்கு வந்திருக்கிறதோ என்று நினைத்தோம்.

மைசூரில் மிக செல்வாக்கு படைத்தவரும். காங்கிரசில் முக்கிய பதவி வகிப்பவருமான, ஒருவர் வந்தார்.

அவருக்கு முன்பெல்லாம் நமது கட்சியென்றால் பிடிக்காது, நம்மை மிகவும் அலட்சியம் செய்து வந்தார். அப்படிப்பட்டவர் வந்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது அவர் கவர்னரின் விருந்தினராக இருப்பதால் கவர்னர் காரில் வந்தார். அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போது கூறினர். “உங்களுடைய கட்சி தென்னகத்தில் நல்ல வலுப்பெற்றிருக்கிறது என்பதை உணர்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சக்தியைக் கண்டு வடநாட்டில் உள்ளவர்கள் பயப்படுகிறார்கள்.

பண்டித நேரு இந்த மொழிப் பிரச்னேயில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொண்டார்! அது உங்கள் எதிர்ப்பின் சக்தி தான் என்று கூறியதோடு நம்முடைய கழகத்தின் லட்சியங்களையும், கொள்கைகளையும் தெளிந்து கொள்ளவே வந்திருப்பதாகவும் கூறினர். ஆகவே இங்குள்ள சிறுமதியினருக்கு நமது வளர்ச்சியை உணர்ந்து கொள்ள முடியவில்லை ஆனல் டில்லியிலுள்ள இவர்களது எஜமானர்கள் நமது பலத்தை, எதிர்ப்பின் தன்மையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள், பாராளுமன்றத்தில் கூட நான் பல எதிர்ப்புக்கிடையில் பணி புரிகிறேன் என்றால்— நம்முடைய லட்சிய முழக்கத்தை முழக்குகிறேன் என்றால் நீங்கள் என்னுடைய பின்னல் இருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து தான். நம்முடைய கழகத்தின் வளர்ச்சியால் தான்.

நாம் சேலத்தில் இரும்பு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று எடுத்துக் கூறினேம் அப்பொழுது பழிப்பினர்கள். மறுத்தார்கள்.

இப்பொழுது நாம் சொன்ன காரணங்களை ஒப்புக் கொண்டு அங்கு வேலை தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இந்த வேலைகளுக்கு ஜெர்மன் சர்க்காரும் உதவி செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

நடந்த பெரிய போரில் ஈடுபட்டு பல தொல்லைக்குள்ளாகி, அங்குள்ள தொழிற்சாலைகளும் கட்டிடங்களும் தரை மட்டமாகியது அங்கு எல்லாம் காடாகத் திகழ்ந்தது.

அதை யெல்லாம் சரி செய்து தொழில் வளங்களைப் பெருக்கி இன்று நமக்கும் உதவும் நிலை இருக்கிறது. காரணம் என்ன அங்குள்ள அரசினரின் திறமையும், அங்குள்ள நாட்டு மக்களின் நாட்டுப்பற்றே யாகும்!

சேலம் இரும்புத் தொழிற்சாலை வைப்பதைப் பற்றிய பரிசோதனை முடிந்து விட்டதாகவும் அதில் வெற்றி கண்டு விட்டதாகவும் பத்திரிகையில் படித்தேன் ஆனல் அந்த இலாகா மந்திரியைக் கேட்டதற்கு, அதை இன்னும் ஒன்றும் தெரியவில்லையென்றும், பரிசோதனையிலிருக்கிறதென்றும் கூறினர்.

ரயில் பாதைகள் சரியாக இல்லை யென்றும், பல புதிய பாதைகள் போட வேண்டுமென்றும் கேட்கப்படுகிறது. ஆனல் திட்டக் கமிஷன் அனுமதியின் மீது தான் போட வேண்டுமென்று கூறப்படுகிறது. புதிய பாதைகள் போடுவதில் பீகார், பம்பாய் மாகாணத்திற்குக் காட்டும் சலுகைகள் தென்னகத்திற்குக் காட்டுவதில்லை!

சேலம் மைசூர் வழியாக புதிய பாதைகள் போட வேண்டுமென்று கேட்டதற்குச் சரியான படி சமாதானம் கூறவில்லை அமைச்சர்கள் மழுப்புகிறார்கள்,

ஆனல் ரயில்வே மந்திரிக்குப் பிரியமில்லாத இடங்களுக்குத் திட்டக் கமிஷன் அனுமதி இருப்பதற்குத் தான் போடுகிறோம் என்று தந்திரமாகக் கூறித் தப்பித்துக் கொள்கிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

கல்யாண வீட்டார் மகிழ்வோடிருப்பார்கள் !
இழவு வீட்டார் மௌனமாக இருப்பார்கள் !

(சம்பத் பேச்சு)
(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் திட்டக் கமிஷன் அனுமதி இல்லாமலேயே பல இடங்களில் ரயில் பாதைகள் போடப்பட்டு வருகிறது.

இன்று நாட்டின் நலனுக்கான எல்லா சட்டங்களும் வடநாட்டார் கையில் இருக்கிறது. தென்னகத்திற்குச் செய்ய வேண்டியதைச் செய்யாது புறக்கணித்து வருகிறார்கள்.

தென்னகத்தில் இருக்கும் படித்தவர்களுக்கு நாட்டுப் பற்றும் நாட்டு விடுதலையில் அக்கறையும் இருக்க வேண்டும் இன்று நம் நாட்டிலுள்ள படித்தவர்கள் அறிவாளிகள் தங்கள் சொந்த வாழ்க்கையைத் தான் கவனிக்கிறார்களே ஒழிய மக்களின் நல்வாழ்வைப் பற்றிக் கவனிப்பதில்லை.

வட நாட்டிலுள்ள பல இடங்களில் தென்னகத்தார் ஊழியம் செய்கிறார்கள், அவர்கள் அறிவிலும் திறமையிலும் சிறந்தவர்கள் என்று தெரிந்தே பணியில் வைத்திருக்கிறார்கள். என்றய தினம் ஆங்கிலம் நீங்கி, இந்தி வருமோ அன்று தென்னகத்தாரை அனுப்பி விடலாமென்று எண்ணுகின்றனர்.

நாம் நம்முடைய நாட்டு கௌரவத்தையும், நம்முடைய சுயமரியாதையையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். உத்தியோகமே பெரிதென வாதாடக் கூடாது, உத்தியோகத்தில் நமது கவனம் செலுத்தினால் நம்மை கேவலமாக மதிக்க ஆரம்பித்து விடுவார்கள், விகிதாச்சார முறையில் உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது நம்மை நாம் இழிவு படுத்திக் கொள்வதே யாகும்.

வெள்ளைக்காரன் காலத்தில் அவனிடம் வகுப்பு வாரிட் பிரதிநிதித்துவப்படி உத்தியோகம் கேட்டோம். அன்றைய நிலை வேறு, இன்றய நிலைவேறு இன்று நாம் நமது நாடு விடுதலை அடைந்து நாம் சுதந்திர மக்களாக வாழ வேண்டுமென்று போராடுகிறோம்.

இன்று திராவிடர் கழகம் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறது.

உத்தியோகம் வாங்கிக்கொடுப்பதற்காக ஒரு கட்சி தேவை இல்லை" நாய் எலும்புத் துண்டிற்கு நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருப்பது போன்று உத்தியோகத்திற்காக நாக்கைத் தொங்கவிட்டிருக்க வேண்டியதில்லை.

காங்கிரசையும் அதன் தலைவர்களையும் தாக்கி வந்த பெரியார் இன்று காமராசரை கொள்கைக்கும், விரோதமாக ஆதரிக்கிறார்,

ஒரு இனம் விடுதலை அடைய வேண்டும். அடிமை விலங்கை அகற்ற வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் உத்தியோகம் வேண்டுமென்று கேட்பது அடிமைத்தனத்தைக் காட்டுவதுடன், அறிவீனத்தையும் காட்டுகிறது.

பெரியார் தான அன்று திராவிட நாடு கேட்டார். இன்று வேண்டாமென்று கூறுகிறார். இது அடிப்படையிலேயே கோளாறு முன்பு விரும்பியவர் இன்று வேண்டாம் என்கிறார். அதன் காரணம் என்ன, காமராசரை ஆதரிக்கவும் அவருடைய சேவையைப் புகழவும் ஒரு கட்சி தேவை இல்லை ஐயருக்கு இவ்வளவு உத்தியோகம், மற்றவர்களுக்கு இவ்வளவு உத்தியோகம் என்று கூறிக் கொண்டிருப்பது பிற்போக்குத் தன்மை சமீபத்தில் திராவிடர் கழகப் பத்திரிகையான விடுதலையில் ஒரு தலையங்கத்தைப் பார்த்தேன்! அதில் வெள்ளைக்காரன் காலத்தில் பிராமணர்களுக்கு இவ்வளவு உத்தியோகம், பிராமணரல்லாதார்களுக்கு இவ்வளவு உத்தியோகம் என்று காண முடிந்தது!

ஆனால் இப்போது சாதிப் பெயர்கள் போடாததால் யார் யாருக்கு எவ்வளவு உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று காண முடியவில்லை. இதற்காக ஒரு போராட்டம் நடத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறது.

இது இப்போது தேவையற்றது, நம்முடைய நாட்டு விடுதலையைப் பற்றி எண்ண வேண்டும்.

நம் நாடு விடுதலை அடைய வேண்டுமானால் ரத்தம் சிந்த வேண்டும், தியாகத் தழும்பை ஏற்க வேண்டும். நாம், எத்தனை பேர்கள் இருந்தோம். இன்று எத்தனை பேர்கள் இருக்கிறோம் என்ற தியாகப் பட்டியலைப் பார்க்க வேண்டும் நம்முடைய எண்ணங்கள் மாற வேண்டும். நம் சுபாவம் மாறவேண்டும் நம்முடைய பழைய காலங்களை எண்ணிக் கொண்டிருக்க கூடாது.

நாம் சேரன் செங்குட்டுவனை பற்றிப் பேசி பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களது வீரச் செயல்களையும், வடக்கே போய் எதிரிகளை வென்று அவர்கள் தலையில் கல்லைச் சுமக்க வைத்து, கண்ணகிக்கு சிலை வைத்ததையும் புகழ்கிறோம். நாம் அவர்கள் பரம்பரை என்கிறோம்.

அப்படிக் கூற நமக்கு யோக்கியதையே இல்லை. அந்த சேரன் செங்குட்டுவன் மீண்டும் எழுந்துவந்தால் நம்மை அவர்கள் பரம்பரை யென்றே ஒத்துக் கொள்ள மாட்டார்கள், அவர்களெல்லாம், ரஷ்யாவிலோ அமெரிக்காவிலோ இருப்பதாக வே நினைத்து ஓடி விடுவார்கள், அமெரிக்கா. ரஷ்யா சீறு விடுதலை அடைந்ததை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும், நாம் வெறும் பேச்சுகளோடு நின்று விடக்கூடாது நாட்டை விடுதலையடையச் செய்வது என்பது லேசானதல்ல! தியாக சக்திகள் பெருக வேண்டும்.

நாட்டு விடுதலை பாட்டுப் பாடிப் பெறுவதல்ல.

கோழைகளுக்கு நாட்டு விடுதலை இயக்கத்தில் இடம் கிடையாது. நம் இயக்கத்தில் பல தியாக உள்ளம் படைத்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு நல்ல முறையில் வழி காட்ட வேண்டும்.

நம் நாடு விடுதலை பெறுவதற்கான அறிகுறிகள் பல தோன்றுகின்றன, அதை கைகூடும் படியான வகையில் உபயோகப் படுத்த வேண்டும்! விடுதலை இயக்கத்திலுள்ளவர்களுக்குக் கடுமையான மனப்பான்மை இருக்க வேண்டும் விட்டுக் கொடுக்கும் தன்மை கூடாது.

வடக்கே பலவகையில் நமது மாநிலத்தைப் புறக்கணிக்கிறார்கள். வேண்டியவர்கள் என்பதற்காகப் பல லட்சக்கணக்கான பணங்களை வீசுகிறார்கள் பண்டித நேருவின் பிரதம செயலாளர் லட்சுமி மேனன் கணவர் பார்வையில் நடக்கும் ஒரு நிறுவனத்திற்கு பல லட்சக்கணக்கான பணம் விரயமாக்கப்படுகிறது. அதனால் எவ்வித நன்மையுமில்லை

நமது மாநிலத்திலுள்ள சர்க்கார் காரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கும், டெல்லியிலுள்ள சர்க்கார் காரியாலயத்தில் பணியாற்றுபவர்களும் பல மாறுபாடுகள் இருந்து வருகிறது.

சென்னை மாநிலத்திலுள்ள அலுவலகத்தில் இரவு 8 மணி வரை வேலை செய்து விட்டு வீட்டிற்கும் நீக்காடுகளை எடுத்து வந்து வேலை செய்வார்கள். டில்லியிலுள்ள சர்க்கார் ஊழியர்கள் 5 மணிக்கு மேல் வேலையே செய்ய மாட்டார்கள். நீக்காடுகளை (பைல்களை) வீட்டிற்குக் கொண்டு போகவே மாட்டார்கள். இந்த மாதிரியான பல அநியாயங்கள் நடைபெறுகின்றன,

சென்னை செங்கற்பட்டுப் பகுதிகளில் நமது கழகத்தையும், நமது தலைவர்களையும் இழிவாகத் தாக்குவதாகவும், நமது தோழர்கள் மீது போலீசை வைத்து தவறான நடவடிக்கைகள் செய்து வருவதாகவும் நண்பர்கள் கூறினார்கள்,

சென்னை மாநில போலீஸ் அமைச்சர் பக்தவச்சலத்தை வைத்து எது வேண்டுமானாலும் செய்யட்டும் அதைப் பற்றிக் கவலை இல்லை.

இதை வைத்து நம்மை அழித்துவிட முடியாது,

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் அளகேசன் மிகவும் கேவலமாகவும், இழிவாகவும் பேசி வருவதாகவும் சொன்னார்கள், அவர் சென்ற பொதுத் தேர்தலின் தோற்றது காஞ்சிபுரத்தில் இழிவான முறையில பேசிய பேச்சுக்களாலேயேயாகும். அவர் கதை மறந்துவிட வேண்டாம். நானும் செங்கற்பட்டு மாவட்டத்தின் பல இடங்களுக்குப் போகத்தான் போகிறேன் அப்போது வேண்டுமானால் அவர் எது வேண்டுமானாலும் செய்து பார்க்கட்டும்,

கூட்டங்களில் கண்ணியத்தைக் கடைபிடிக்காத புல்லர்களுக்கு நல்ல புத்தி புகட்டியே தீர வேண்டும். அதைத் பொது மக்கள் செய்வார்கள்.

கடந்த நான்கு மாதங்களாக இங்கு பலவித குழப்பங்களைச் செய்து வருவதாகவும், பொதுச் செயலாளரைப்பற்றி பல புரளிகள் கிண்டு முடித்துவிடப் பார்க்கிறார்கள், இவர்கள் கிண்டு முடித்து விடும் தன்மை இங்கு பலிக்காது.

முன்பு தோழர் நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராகத் தேர்தெடுக்கப்பட்டார் என்ற செய்தியைப் போட விரும்பாத பத்திரிகைகள் நமது சமூகத் தேர்தலைப் பற்றி விமர்சனம் செய்யப் புறப்படுகிறது. ஒவ்வொருவருடைய பூர்வோத்தமங்களைப் போட்டு வருகிறது. இது அவர்களுடைய ஈன புத்தியைத் தான் காட்டுகிறது.

அது மாத்திரமல்லாது இன்னும் பல வீண்புரளிகளையும் சில அற்பர்கள் செய்து வருகிறார்கள். மேடைகளில் பேசி வருகிறார்கள். "அண்ணாவுக்கும் சம்பத்துக்கும் லடாய், சம்பத் காங்கிரசில் சேரப் போகிறார்" என்றெல்லாம் வதந்திகளைக் கிளப்புவதாகவும் கேள்விப் படுகிறேன்.

இந்தப் புரளிகளை எவரும் நம்ப மாட்டார்கள். எனக்கும் அண்ணாவிற்கும் தகராறு என்று அமெரிக்காவிலோ, ருஷியா

(8-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்

பி. எஸ். இளங்கோ

எழுதும்

தேர்தல் புரி யாத்திரை

வெளிவரும் !

திராவிட நாட்டுப் பிரச்சினையை ஐ. நா. சபைக்குக் கொண்டு போவேன் என்று அன்று சொன்னார் அண்ணா!

தங்கநிக்கா நாட்டுத் தலைவர், லெசர்முர் வழி காட்டிவிட்டார் இன்று!

அண்ணாவை கேலி செய்த அரசியல் கபோதிகளே இதற்கு என்ன பதில்?

நாவலர் நெடுஞ்செழியன் அறை கூவல்!

சென்னை சேப்பாக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 3-4-60ம் நாள் பார்த்த சாரதி நாயுடு தெருவில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டமும், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி நினைவு மன்ற ஆண்டு விழாவும் வட்டத்து நகரமன்ற உறுப்பினர் தோழர் தி. துரைக்கண்ணு அவர்களுக்கு பாராட்டுக் கூட்டமும் தோழர் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கே பிச்சை, நகர மன்ற உறுப்பினர் சிட்டிபாபு ஆகியவர்கள் காங்கிரஸ் சர்க்காரின் நீதியற்ற போக்கு பற்றியும், மாற்றுக் கட்சியினரின் நேர்மையற்ற போக்கைப் பற்றியும் நகராண்மைக் கழகத்தில் சாதித்த சாதனைகளைப் பற்றியும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் பேசினார்கள்.

நகர மன்ற உறுப்பினர் தோழர் தி. துரைக்கண்ணு அவர்கட்கு வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டது பல மன்றங்களின் சார்பில் கைத்தறி துண்டு பரிசளிக்கப்பட்டது!

நகர உறுப்பினர் துரைக்கண்ணு அவர்கள் நகர மன்றத்தில் தனது வட்டத்திற்குச் செய்த சீரிய பணிகள் பற்றியும், கடந்த ஓராண்டில் முன்பிருந்த மாற்றுக் கட்சி உறுப்பினர் செய்யாதவைகளை யெல்லாம் செய்திருப்பதாக புள்ளி விபரங்களுடனும், தனக்கு வாழ்த்து மடல் வாசித்தளித்தமைக்கும் பாராட்டுதலையும் பற்றியும் நன்றி தெரிவித்தார்,

பின் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் நீண்ட கையொலிகளுக்கிடையில் பேசியதாவது:—

அன்புக் கெழுமிய அவைத் தலைவர் அவர்களே! மதிப்பிற்குரிய பெரியோர்களே! நண்பர்களே! தாய்மார்களே!

இன்று நடைபெறும் இந்த மாபெரும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை நல்கியதற்காக இந்த வட்டத்துத் தோழர்களுக்கு எனது நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு அருமையான கருத்துக்களை உங்களுக்குக் கூற ஒப்புக் கொண்டிருந்தார், ஆனால் எதிர்பாராத காரணத்தால இன்று காஞ்சிபுரத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

அந்தக் கூட்டத்தில் கலந்து பேசிவிட்டு, உடனே அவசரமாக இங்கு ஓடி வருவார். அவர் வரும் வரை நான் பேசிக் கொண்டிருப்பேன். அவர் வந்ததும் பேச்சை நிறுத்திக் கொள்வேன்.

அவர் வரும் வரை என்னைப் பேசிக் கொண்டிருக்கும் படி அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளை அதன் படி. உங்கள் முன் நிற்கிறேன்.

"தம்பியுடையான் படைக் கஞ்சான்" என்ற முதுரைக்கிணங்க தம்பி நான் இருக்கிறேன் எல்லாம் கவனித்துக் கொள்வேன் என்று கருதியே சிறிது தாமதமாக வருவார், எப்படியும் ஒன்பது மணியளவில் வந்து விடுவார். அதுவரை பொறுமையுடனிருந்து அமைதியான முறையில் கூட்டத்தை நடத்திக் கொடுக்க வேண்டுகிறேன்,

எனக்கு முன் பேசிய அருமை நண்பர்கள் மாற்றுக் கட்சியினர் தங்கள் கூட்டங்களில் நம்மை மிகவும் இழிவாகவும் ஆபாசமாவும், தாக்கி ஏசி வருவதாகவும் நமது கழகத்தை அழித்து விடுதாகவும் பேசியதாகக் கூறி வருத்தம் தெரிவித்தார்கள்,

நமது கழகம் என்று தோன்றிற்றோ அன்றிலிருந்து அதை அழிக்கவும், ஒழிக்கவும் முற்பட்டவர்கள் ஏராளம்; நம்மை வசைமாறி பொழிந்து இழிவாகப் பேசியவர்கள் அநேகம் பேர்,

நமது கழகம் 1946-ம் ஆண்டு துவக்கப்பட்டது! துவங்கிய மறுநாளே நம்மைத் தாக்கி நாம் வாழ மாட்டோம். ஒழிந்து விடுவோம் என்று ஏககாளம் மிட்டவர்கள் பலர் அன்று அழிந்து விடவில்லை. அதற்கு பதல் அவர்கள் எண்ணத்திற்கு மாறாக வளர்ந்து விட்டோம்,



அப்படி எண்ணியவர்கள் தேய்ந்து விட்டார்கள்.

இன்று நாட்டில் செல்வாக்கிழந்து, மக்களின் நம்பிக்கையை இழந்து வரும் மாற்றார்கள் தூற்றுகிறார்கள், அவர்கள் தூற்றுவதைக் கண்டு நாம் ஏன் வருந்த வேண்டும்!

அவர்களால் முடிந்தளவு ஏசட்டும் தூற்றுகிற வரை தூற்றட்டும், நாம் அவர்களைத் தூற்ற வேண்டாம் ஏச வேண்டாம்.

நமது முதலமைச்சர் நம்மைக் கடுமையாகத் தாக்கி வருகிறார்! நமதருமை அண்ணா அவர்களுக்கு அரசியல் அறிவு இல்லை யென்கிறார்,

இவர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பதவிக்கு வந்ததிலிருந்து இன்று வரை அவரைப் பற்றி நன்கு தெரியும்.

நமது அண்ணா அவர்கள் கல்லூரியில் படித்து பட்டம் பெற்று, பல அரசியல் நூல்களையும், பொருளாதாரம், சரித்திரம் இவைகளை நன்குணர்ந்திருக்கிறார், அவரைப் பார்த்து சொல்லுகிறார் அரசியல் அறிவற்றவர் என்று நமது காமராசர் தன்னை பெரிய அரசியல் மேதையென்று எண்ணிக் கொண்டிருக்கிறார், தாம் ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர் என்று தன்னை எண்ணிக்கொண்டிருக்கிறார் தன்னைப் பெரிய சரித்திரப் பேராசிரியர் என்றும், பொருளாதார வல்லவர் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறார்,

பொது மக்கள் புரிந்து கொள்வார்கள், நாம் ஆத்திரப் பட வேண்டாம், அண்ணா அவர்களின் அறிவு நுட்பத்தைப்

பேசத் தான் தெரியுமாம் நமக்கு ஆளத் தெரியாதாம் !

ஆளத்தெரிந்தவர்கள் 1500 ஜோடி பூட்சுகளை கோட்டை விட்டனர்!

மற்றியும், அவருக்குள்ள அரசியல் திறமைப்பற்றியும் காமராசர் அறிவு நுட்பத்தைப் பற்றியும் பொது மக்கள் எடைபோட்டுப் பார்க்க மாட்டார்களா?

அண்ணாவின் பேச்சுத் திறமை, காமராசர் பேச்சுத் திறமை, இரண்டு பேர்களின் பேச்சிலுள்ள கருத்தாழம் இவைகளை மக்கள் தெரிந்து கொள்ள மாட்டார்களா?

நிதியமைச்சர் சுப்பிரமணியமோ, மற்ற அமைச்சர்களோ கூறினாலும் அர்த்தமுண்டு, ஆனால் காமராசர் கூறுகிறார் "அண்ணாதுரைக்கு அரசியல் தெரியாது" என்று இதை நாடு சிந்திக்காதா நாட்டு மக்கள் சிந்திக்க மாட்டார்களா?

நான் பல கூட்டங்களில் கூறியது போன்று ரோஜா மலரை எந்தப் பெயர் இட்டு அழைத்தாலும் அழைக்கட்டுமே அதனால் அதற்குள்ள மணம் குன்றி விடுமா?

நாம் நாட்டைப் பிரித்து நாமே ஆளவேண்டுமென்று கூறுகிறோம். அதற்குப் பல காரணங்களை காட்டுகிறோம். பல ஆதாரங்களைக் காட்டுகிறோம். நம்மை விட சிறிய நாடுகள், இங்கு மாவட்டங்களிலுள்ள எண்ணிக்கையை விட குறைந்த எண்ணிக்கையுள்ள நாடுகள் தனியாக இருக்கும் போது எவ்வளி வளங்களைப் பெற்ற நாம் பிரிந்து போக வேண்டுமென்று சொன்னால் தனித்து வாழ முடியுமா என்று கேட்கிறார்கள்.

இன்று மக்கள் சக்தி நம் பக்கம் திரும்பி இருக்கிறது! நாம் வளர்பிறை போல் வளர்கிறோம், பிரிந்து போக வேண்டுமென்ற எண்ணம் மக்களிடை கொழுந்து விட்டெறிகிறது! இதைக் கண்டு காய்ந்து விழுந்தால் நாம் என்ன செய்வது சின்னஞ்சிறு நாடுகள், பூசணிக்காய், சுண்டைக்காய் அளவுள்ள நாடுகளெல்லாம் விடுதலை அடைந்து ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கிறது அப்படி இருக்கும் போது நாம் ஏன் வாழ முடியாது!

நம்மைப் பார்த்து இன்னொன்று கூறுகிறார்கள். நமக்குப் பேசத் தான் தெரியும் ஆளத் தெரியாதென்று இவர்கள் ஆட்சிக்கு வந்து இன்று பன்னிரெண்டு ஆண்டுகள் ஆகிறது. இந்தப் பன்னிரெண்டு ஆண்டுகால ஆட்சியில் நடந்திருக்கும் ஊழல்களையும், திறமையற்ற காரியங்களையும் பார்த்தால் மக்கள் உணர்ந்து கொள்ள மாட்டார்களா? பேசவும் தெரியாது, ஆளவும் தெரியாது, இவர்கள் கூறுகிறார்கள். நமக்கு ஆளத் தெரியாதென்று,

நமது அண்ணா அவர்கள் ஒரு சமயம் கூறினார். "நான் திராவிட நாட்டுப் பிரச்சினைக்காக ஐ. நா. சபைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டால் அங்கு செல்வேன்" என்றார்.

அதாவது "நான் எனது நாட்டு மக்களின் ஆதரவைக் கொண்டு திராவிட நாடு பிரிய வேண்டுமென்று டெல்லி சர்க்காரைக் கேட்பேன், அவர்கள் தங்களது ஏதேச்சாதிகாரத்தால் ஜனநாயகத்திற்கு விரோதமாக மக்களின் எண்ணத்தைப் புறக்கணித்தால்-நம்மை அடக்கி ஆள நினைத்தால், ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கொண்டு நமது கோரிக்கையைப் புறக்கணித்தால் எனது கோரிக்கையைப்புறக்கணித்தால் எனது கோரிக்கையை ஐக்கிய நாடு சபைக்குக் கொண்டு போய் உலக மக்கள் அறியும்படி செய்வேன்" என்று நமது அண்ணா அவர்கள் கூறினார்கள். இதில் என்ன தவறு?

இதை வைத்து நமது அண்ணா அவர்களை கேலி செய்து பேச ஆரம்பித்து விட்டார்கள் "பார்த்தீர்களா இந்த அண்ணாதுரை அறிவை, ஐ. நா. சபைக்குப் போய் திராவிட நாட்டைக் கேட்கப்போகிறாராம்,

என்ன இவருக்குப் பைத்தியம்—ஐ. நா, சபை ஏற்குமா? இவருககு எப்படி அறிஞரானார், இவருக்கு எம். ஏ, பட்டம் கொடுத்தது யார் என்றெல்லாம் கூறி ஏச ஆரம்பித்து விட்டார்கள்!

அவர்களெல்லாம் வெட்கப்படும்படியாக—ஐ. நா. சபைக்கு திராவிட நாடடுப் பிரச்சினையைக் கொண்டு போக முடியும் என்பதற்கு ஆதாரமாக திராவிட நாடுப் பிரச்சினையை எதிர்ப்பவர்களுக்குக் காணிக்கையாக நம்மைப் போல் நாடு விடுதலை அடைய வேண்டுமென்ற விடுதலை உணர்ச்சி கொண்ட ஒரு நாட்டார், ஐ. நா. சபைக்குச் சென்றிருக்கும் செய்தியை உங்களுக்குக் கூறுகிறேன்,

நான் கூறும் இந்தச் செய்தி "டைம்ஸ் ஆப் இந்தியா" என் ஆங்கிலப் பத்திரிகையில் வந்ததை 7-3-60ம் நாள் இந்துப் பத்திரிகையில் முக்கிய தலைப்பு கொடுத்து வெளியிட்டிருக்கிறது

"டைம்ஸ் ஆப் இந்தியா" அகில இந்தியாவில் செல்வாக்குப் படைத்த ஒரு சிறந்த பத்திரிகை. அதில் வந்ததைத் தான் உங்களிடம் கூறப்போகிறேன். இந்தச் செய்தியை நியூயார்க்கிலுள்ள ஐ.நா. சபையின் செய்தி இலாகா அறிவித்திருக்கிறது அதாவது,

பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்து வந்த தங்க நீக்க என்ற ஒரு சிறிய தீவு, தான் பிரிந்து தனித்து வாழ நினைத்தது. அது அடிமையாக இருக்க விரும்பவில்லை. இந்த தங்க நீக்கா ஆப்பிரிக்காவைச்சார்ந்தது, அந்த நாட்டைச் சார்ந்த தலைவர் லெசர்மூர் என்பவர் பிரிட்டிஸ் அரசாங்கத்திற்கும் ஐ. நா. சபை செயலாளருக்கும் ஒரு கடிதம் எழுதி விட்டார். என்ன எழுதினார், எங்கள் நாடு பிரிய வேண்டும், நாங்கள் தனித்துவாழ விரும்புகிறோம் உங்கள் ஆதரவு வேண்டுமென்றா எழுதினார? இல்லை!

'தங்கநீக்கா என்ற எங்கள் நாடு பிரிட்டன் ஆதிக்கத்திலிருந்து 1956 டிசம்பர் 31ம் தேதி இரவு 12 மணியோடு விடுதலை அடைந்து விட்டது" என்பதாகும் நாடு பிரிய வேண்டுமென்று கேட்கவில்லை பிரிந்து விட்டது என்று கூறி விட்டார்! இந்த கடிதத்தை ஐ நா, சபை ஏற்றது!

இந்த நாடு ஒரு மைல் நீளமும் 1 மைல் அகலமுள்ளது. இந்த நாடு விடுதலை அடையும் போது நாம் அடைய முடியாதா? அந்த நாட்டுத் தலைவர் ஐ நா சபைக்கு தனது கோரிக்கையை அனுப்பும் போது நாம் அனுப்ப முடியாதா இதை உணராது நம்மை ஏசியும் இழித்தும் பார்க்கிறார்கள்.

ஏன் தங்கநிக்கா பிரிந்து போக நினைத்தது.

தாங்கள் தங்கள் நாட்டிலிருந்து வரிகளைக் கொடுத்து அலுத்தது. அவர்களுக்கு எந்த நன்மையும் கிட்டவில்லை. அவர்கள் நாடு அடிமையாகவும், பிரிட்டன் ஏதேசாதிகாரத்திலுமிருப்பதை விரும்பவில்லை,

அடிமைத்தனத்லிருந்து விடுதலை அடைய நினைததார்கள் விடுதலை பெற்றார்கள்.

அதே போன்று தான் டில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைய விரும்புகிறோம். டில்லியின் இணைப்பால் நமக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. நம்மைப் புறக்கணிக்கிறார்கள் என்று எண்ணுகிறோம்! வரிகள் கொட்டி அழுதும் எந்தவித பயனுமில்லை என்று உணர்கிறோம், நம்முடைய நாட்டிற்கு எதுவும் செய்யவில்லையென்று நினைத்து பிரிந்து போக எண்ணுகிறோம்.

ஐ.நா. சபையின் பொதுக் காரியதரிசி ஹாமர் சீல்டிக்கரக ரிட்சர்டுடிமால் அந்தக் கடிதத்தை ஏற்று பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்பி இருக்கிறார்.

அண்ணாவை கேலியும், கிண்டலும செய்தவர்கள் இதற்கென்ன பதில் கூறுவார்கள்.

சின்னஞ்சிறு தீவாகிய தங்கநிக்காவுக்கு எப்படி தைரியம் வந்தது அந்தநாட்டு மக்களின் உணர்ச்சியும், எழுச்சியும் தானே அந்த நாட்டிற்கு தனித்து வாழ முடியுமென்ற தைரியமிருக்கும் போது நாம் ஏன் தனித்து வாழமுடியாது

டில்லி அரசாங்கம் தென்னகத்தின் வளர்ச்சியில் அக்கரை இல்லை என்பதை பல உதாரணங்களுடன் கூறி வருகிறோம்.

நமக்கு ஆளும் திறமை இல்லை என்று கூறுகிற இந்த மாநில அரசின் நிர்வாகத் திறமையற்ற நிலமையைப் பற்றிய ஒரு உதாரணத்தைக் கூற ஆசைப் படுகிறேன்.

சிறு கைத் தொழில்போர்டார் 1958 59ம் ஆண்டு அறிக்கையைப் பற்றிய ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறார்கள், அதில் 40-ம் பக்கத்தில் ஒரு விஷயம் காணப்படுகிறது.

ரஷ்ய சர்க்காருக்கு 60000 கோடி தோல் பூட்ஸ்தேவைப்பட்டிருக்கிறது அதற்கு இந்தியாவுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். ரஷ்யாவில் தோல் பஞ்சம் இருந்ததால் தான் இந்தியாவுக்குக் கொடுத்தார்கள்.

இந்திய சர்க்கார் நான்கு மாநிலத்தாருக்கு ஆர்டர் கொடுத்தார்கள்.

அதில் ஆக்கிராவிற்கு 30,300 ஜோடிகள் பம்பாயுக்கு 3300 ஜோடிகள் டில்லிக்கு 11,900 ஜோடிகள் சென்னை 1500 ஜோடிகள் எனப்பிரித்துக் கொடுத்தார்கள். ஆனால் இந்த 1500 ஜோடி பூட்ஸ்களைச் செய்து கொடுகக முடியாது அதையும் ஆக்ராவிற்கே திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

இங்குள்ள சிறு கைத்தொழிற்சாலையில் இந்த சிறு தொகை பூட் செய்து கொடுக்க முடியவில்லை

1500ஜோடி பூட்ஸ்கள் செய்து கொடுக்க வகையுற்றிருக்கும் இவர்கள் நமக்கு ஆளத்தெரியாதென்று, ஆகவே நமது நாட்டில் நல்லாட்சி நடைபெறுவதற்கான எல்லா வகையான ஆதரவுகளையும் தரவேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நமது அண்ணா அவர்களும் வந்து விட்டார்கள் அவர்கள் பேச்சைக் கேட்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் ஆகையால் இத்துடன் முடித்துக் கொண்டு விடை பெறுகிறேன்.

நடிப்பிசைப் புலவர் எம்.எல்.சி யானார்!

கலையுலகுக்கு தி. மு. க. செய்திடும் பெரும் பணி!

கொள்கை வீரா! நீ வாழ்க! நீடூழி வாழ்க!

நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, சென்னை மேல் சபைத் தேர்தலில் வெற்றி வாகை சூடி உறுப்பினரானார் என்ற செய்தி நம்மையெல்லாம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி இருக்கிறது!

நாம் மட்டுமல்ல, திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருமே உற்சாகப் பெரு வெள்ளத்தில் மிதந்து, மிதந்து களிப்படைகின்றனர்!

திராவிடப் பெருங்குடி மக்கள் மட்டுமல்ல, தென்னாட்டுக் கலையுலகமும் பூரிப்பால் இதயம் கனத்து களிப்படைந்து கிடக்கிறது!

இந்தச் செய்தி தென்னாட்டு கலைஞர்களை மட்டுமல்ல, உலகக் கலைஞர்கள் அத்தனை பேரையுமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி பூரிப்படைய வைத்திருக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை!

உலகத்திலேயே முதல் முதல் தேர்தலில் நின்று வெற்றி பெற்ற பெருமை நமது நடிப்பிசைப் புலவருக்குத் தான் உண்டு! உலக சரித்திரத்தில் ஒரு புது ஏடு சேர்த்த, ஒரு புரட்சி அத்தியாயத்தை எழுதிய நடிப்பிசைப்புலவரையும், மக்கள் சக்தி படைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தையும் தமிழகம், குறிப்பாக கலையுலகம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளது!

"திராவிட முன்னேற்றக் கழகம் கலையை பாழ்படுத்துகிறது, கலைஞர்களின் வாழ்வை சீர்குலைக்கிறது" என்று ஏசி வந்தவர்களின் எண்ணத்தில் இடி விழும் அளவுக்கு—நடிப்பிசைப் புலவரை நிறுத்தி வைத்து வெற்றி பெற வைத்த தி.மு.க.வையும், ஆதரவு தந்த அத்தனை பேரையும் கலையுலகம் மறக்காது மறக்கவே மறக்காது!

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியை—கே. ஆர். இராமசாமியை என்பதை விட, கே. ஆர். இராமசாமியின் உள்ளத்தை, அவரது உயரிய பண்பை தமிழகம் நன்கு அறியும்!

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி பகட்டுக்காரர் அல்ல, படோடபம் கொண்டு திமிர் பிடித்து அலைபவரும் அல்ல! நடிகர், நல்ல கலைஞர், மக்கள் பணிபுரியும் தொண்டர்! நல்ல கொள்கைக்காரர்! அந்த நல்லவருக்கு இந்த பதவி கிடைத்ததற்காக எல்லோருமே பெருமைப்பட வேண்டும்!

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி பதவியைத் தேடிக் கொண்டு தெருத் தெருவாக அலைந்தவரல்ல! பிறந்த இடத்தை விட்டு விட்டு, பதவியை நாடி வீடு வீடாகப் புகுந்து வந்தவருமல்ல! அதற்காக தானமோ, தாமமோ செய்தவரும் அல்ல! கட்சி, கொள்கை, மக்கள் தொண்டு இதுவே அவரது இலட்சியமாகும்!



கொண்ட கொள்கையில் பற்றுடையவர் என்றும், எதிலுமே தோற்றதில்லை என்பதை நமது நடிப்பிசைப் புலவர் நல்ல உதாரணமாக விளங்குகிறார்! தமிழ்க் கலையுலகம் இதை புரிந்து கொள்ளும் என்றே நம்புகிறோம்! அத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி தெளிவு பெறுவார்கள் என்றும் எண்ணுகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தை விட சக்தி வாய்ந்த கட்சி தமிழகத்தில் இருக்கத் தான் செய்கிறது! அந்தக் கட்சியெல்லாம் கலைஞர்களைப் பற்றி பெருமையாகப் பேசவும் தான் செய்கின்றன! அந்த பெருமையெல்லாம் வாயளவோடு என்பதைப் புரிந்து கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்!

தமிழகத்தில் வேறு எந்த கட்சியும் ஒரு கலைஞனை தேர்தலில் நிறுத்தி வைத்தால் வெற்றி பெற முடியாது என்று நாங்கள் கூறவில்லை! நிச்சயமாக எத்தனை கலைஞர்களை நிறுத்தினாலும் வெற்றி பெற வைக்க முடியும்! ஆனால் அந்த எண்ணம் எங்கள் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்குமே வராது, நிச்சயமாக வராது! காரணம் என்ன?

மற்ற கட்சிகளெல்லாம் கலைஞனை வெறும் கூத்தாடி என்றே எண்ணுகிறது! கூத்தாடிக்கு அரசியல் தெரியாது, கூடாது, அந்த அரசியல் உருப்படவும் உருப்படாது என்றே எண்ணுகிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்று தான் கலையும், அரசியலும்—கலைஞனும், அரசியல்வாதியும் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்று எண்ணுகிறது!

இதைத் தமிழ்க் கலையுலகம் உணரும் காலம் நெருங்கியும் வருகிறது!

நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமியின் பணி இந்த மாற்றத்தை உண்டாக்கும் என்பதில் துளியும் சந்தேகமில்லை!

நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, "கலைக்காகவும் கட்சிக்காகவும் பாடுபடுவேன்" என்று உறுதியளித்திருக்கிறார்! அவரது உறுதி நிறைவேற நாமெல்லாம் அவருக்கு உறு துணையாக நிற்க வேண்டும்!

நடிப்பிசைப் புலவரும் கட்சி வேறுபாடின்றி கலைக்காக, கலைஞர்களுடைய நல்வாழ்வுக்காகப் பாடுபட வேண்டும் எனக் கூறி அவருக்கு நல்வாழ்த்துக் கூறி பாராட்டுகிறோம்!

வாழ்க நடிப்பிசைப் புலவர்!

வாழ்க எம். எல்.சி. இராமசாமி!

கார்ட்டூன் தேவையா? எழுதுங்கள்

முதன் முதலில் நமது இயக்க ஏடுகளில் 'முரசொலி'யும், மாலைமணியும் தான் கார்ட்டூன்களை வெளியிட்டு வந்தன! இப்போது பக்கத்திற்குப் பக்கம் கார்ட்டூன்களை வெளியிட பல ஏடுகள் முன்வந்துள்ளன! தமிழகத்திற்கே இது உரித்தான வியாதி!

கார்ட்டூன் படங்களை வெளியிட்டு ஒரு பக்கத்தை வீணாக்க வேண்டாம் என்று பல நண்பர் எழுதுகின்றனர்!

அதுவும் ஓரளவு உண்மை தான்! அந்த இடத்தை நமது தலைவர்களின் பொன்னான கருத்துகளை நிரப்பினால் எத்தனையோ பலனுண்டு!

என்றாலும் கார்ட்டூன் தேவைதானா? உங்கள் அபிப்ராயத்தை எழுதுங்கள். உங்கள் எண்ணப்படி நடக்கிறோம்.

—ஆசிரியர்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வியோ, ஜப்பானிலோ போய் கூறினால் நம்புவார்கள், இங்குள்ளோர் நம்புவதற்கு அவ்வளவு பைத்தியக்காரர்களல்ல, எப்பொழுதும் கல்யாண வீடுகளில் கோலாகலமாகவும் பலத்த கூச்சலுமே வந்து கொண்டிருக்கும். இழவு வீட்டில் மௌனம் தான் பரவும். இழவு வீட்டுக் காரன் கல்யாண வீட்டை எட்டிப் பார்ப்பதே அற்பத்தனம் அதைவிட, அதைப் பற்றிப் பேசுவது அயோக்கியத்தனம் இதையெல்லாம் கொண்டு கழகத்தை அழித்து விடலாம் என்று கருதுபவர்களுக்கு எதிரே இருக்கும் சுவரட்டியைப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பல பெயர்கள் போடப்பட்டு கீழே என். வி. என். சோமு டேசுவார் என்று இருக்கிறது. (என். வி. நடராஜன் புதல்வர்) எதிரிகளுக்குச் சுட்டிக் காட்டுகிறேன் இரண்டாம் பரம்பரை வந்து விட்டது, மூன்றும் பரம்பரை வந்து கொண்டிருக்கிறது. ஆகையால் எங்களை அழிக்க முடியாது. ஒழிக்க முடியாது வளர்ந்து விட்டோம். என்பதைக் கூறுவதுடன் நீங்களெல்லாம் நமது கழகத்தை நல்ல முறையில் வளர ஆதரவு தருவதுடன், நமது நாடு விடுதலை அடைவதற்கான பணியில் ஈடுபடும்படி கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன்.

வணக்கம்.

தி. மு. கவின் கொள்கைகள் வளர்பிறை போல் வளர்கிறது !

இதைக்கண்டு அமாவாசைகள் அலறுகின்றன !

கலைஞர் கருணாநிதி முழக்கம் !

[58வது வட்டம் சென்னை புதுப்பாக்கம் மாண்ட மாவீரன் தூத்துக்குடி கே. வி கே. சாமி நினைவு மன்ற 3வது ஆண்டுவிழாவும், வட்டத்து தி. மு. க. நகர மன்ற உறுப்பினரும், சென்னை பல்கலைக்கழக செனட் உறுப்பினருமான திரு. சிட்டிபாபு அவர்களைப்பாராட்டும்விழாவும் 7-4 ரும் நாள் மாலை லார்ட் கோவிந்தாஸ் தெருவில் (மிட்லண்டு தியேட்டருக்குப் பின் புறம்) நடைபெற்றது. தோழர் எம். கே. சாமி தலைமை வகித்தார்கள்.

நகர மன்ற உறுப்பினர்களான தோழர்கள்சடகோபன். ஜி. சுப்பிரமணியம் ஆகியவர்கள் பேசினார்கள்.

பின் தோழர் சிட்டிபாபு அவர்களுக்கு வரவேற்பிதழ், வாசித்தளிக்கப்பட்டது. பல நிறுவனங்கள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் சூட்டப்பட்டது.

தோழர் சிட்டிபாபு வரவேற்பிற்கு நன்றி கூறி. தாமும், திராவிட முன்னேற்றக் கழகமும், நகரமன்றத்தில் சாதித்த சாதனைகளையும் சிறப்பாக தமது வட்டத்தில் இந்த ஓராண்டு காலத்தில் செய்த பணிகளையும் மிக விளக்கமாக புள்ளிவிபரங்களுடன் பேசினார்

அடுத்து கலைஞர் கருணாநிதி அவர்கள் பெருத்த கை ஒலிகளுக்கிடையே பேசியதாவது.—

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே பெரியோர்களே தாய்மார்களே!

இன்று இங்கு. நமது கொள்கையைப் பரப்புவதற்காக அரும்பாடுபட்டு உழைத்து அரும் பெரும் தியாகங்களைச் செய்தவரும், திருநெல்வேலி மாவட்டத்தில கழக வளர்ச்சிக்காக நல்ல பல பணிகளைப் புரிந்தவருமான தூத்துக்குடி தங்கம்—மறைந்த மாவீரன் கே. வி. கே. சாமியின் பெயரால் நடைபெறும் மன்றத்தின் மூன்றும் ஆண்டு விழாவிலும், நான் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றதற்காகவும் நமது அருமை நண்பர் தோழர் சிட்டிபாபு அவர்கள் நகரமன்ற உறுப்பினராகத் தேர்தெடுக்கட்டதைப் பாராட்டுவதற்காகக் கூட்டப்பட்டிருக்கும் கூட்டத்திலும் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றதற்காகவும் நான் பெரும் மகிழ்ச்சியடைவதுடன் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்

இங்கு எனக்கு முன் பேசிய நண்பர்கள் சடகோபனும், ஜி. சுப்பிரமணியமும் நமது கழகம் ஆற்றிவரும் பணிகளைப் பற்றியும், நகரமன்றத்தில் செய்து வரும் காரியங்களைப் பற்றியும் மிக விளக்கமாகவும், மாற்றுக் கட்சியினரின் தூற்றுதல்களை பற்றியும் விளக்கினார்கள்.

நம்முடைய கொள்கைகளை பல எதிர்ப்புகளுக்கிடையேயும். குண்டர்கள் பலரின் எல்லையற்ற தொல்லைகளுக் கிடையேயும் அஞ்சாது, அயராது பாடுபட்டு தனது விலை மதிக்க வொண்ணா உயிரைப் பறி கொடுத்த மாவீரன் கே வி கே. சாமியை நாம் மறக்கக் கூடாது. அப்படி மறந்தால் நாம் நன்றி கொன்றவர்களாவோம். நம்மைப் பார்த்து மற்றவர்கள் நன்றி கொன்ற பரம்பரையினர் என்று கூறும்படியான வகையில் நடந்து கொள்ளக் கூடாது.

அவரது தொண்டுகளை, அவர் நமது கொள்கைகளுக்காக உயிர் விட்டதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கே. வி. கே. சாமி அவர்களின் உயிரைக் கொன்று ரத்தத்தைக் குடித்து நாக்கைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் கொடுமைக்காரர்கள் இன்னும் பல உயிர்களைக் கொன்று ரத்தத்தைக் குடிக்க ஆவலாக இருக்கிறார்கள்.

நமது நண்பர்கள் சடகோபன் சுப்ரமணியம், சிட்டிபாபு தங்களது திட்டத்தையும். பணியையும் கூறியபோது கழகம் செய்து வரும் பணிகளைக் கூறிய போது நான் பெரும் மகிழ்வு கொண்டேன்

நமது கழகத்தின் சார்பில் நகர மன்றத்தில் தேர்தெடுக்கப் பட்ட நார்பத்தைந்து உறுப்பினர்களும் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள் திறம்பட நிர்வாகம் செய்கிறார்கள், இதைக் கேட்கிற போது நான் பெருமிதமடைந்தேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் சிட்டிபாபு தான் வயதில், மிகச் சிறியவரென்றும் தான் தனது வட்டத்துக்கு நல்ல பெரிய பணிகளைச் செய்திருப்பதாகவும் கூறினார்.

அவர் பெயரைப் பார்க்கும் போது அவரை பெரியவராகவே எடுத்துக் காட்டுகிறது. பாபு என்றால் வடநாட்டில் பெரியவர்களைக்கூப்பிடுவது, அண்ணனை, தந்தையைக் கூறுவது, 'சிட்டி' என்றால் நகரம் என்று பெயர் ஆகவே நகரத்தந்தை—நகரத்தில் பெரியவரென்றே எடுத்துக்காட்டுகிறது.

அவருக்கு இந்தப் பாராட்டு ஓராண்டிற்குப் பின் நடைபெறுவதைக் கண்டு வருத்தப்பட்டார் இதைக் கண்டு நான் வருந்தவில்லை. மகிழ்ச்சியே அடைந்தேன்!

இளையவரான சிட்டிபாபுவை நகர மன்றத்திற்கு அனுப்புகிறோம் அவரது பணிகள். சேவைகள் எப்படி இருக்கிறதென்று கண்ட பின்—அவரது பணிகளைச் சரிவரச் செய்யாவிட்டால் அவரது மூக்கை அறுத்து விடுவோம் என்று எண்ணியே பாராட்டாதிருந்து விட்டு, இன்று அவர் செய்த பணிகளைப் பார்த்து விட்டு அவரைப் பாராட்டுகிறார்கள். இது தான் நல்லது. இன்று அவரது தொண்டினை மக்கள்—இந்த வட்டத்தினர் உணர்ந்து கொண்டார்கள்.

என்னைப் பார்த்தாலும் உங்களுக்குச் சிறியவனாகவே தோன்றும், எனக்கு வயது முப்பத்தைந்து எனக்கு நாலைந்து குழந்தைகளுமிருக்கிறது, எனது தோற்றத்தைக் கண்டு, வயதைக் கொண்டு பார்க்க கூடாது திறமையைப் பார்த்து, ஆற்றலை எண்ணி, அனுபவத்தை மதித்து தொண்டினை ஏற்று மதிப்பிட வேண்டும்.

நமது மாநில அமைச்சர் கக்கன் அவர்கள் சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் பேசும் போது முன்னேற்றக் கழகத்தில் வாலிபர்கள் அதிகம் இருக்கிறார்கள் என்றும், வாலிபர்கள் கழகத்தார் சொல்லில் மயங்கி அதிகம் சேர்ந்திருக்கிறார்களென்றும் பேசினார்.

காங்கிரசில் மூதியவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்களென்றும், பிஞ்சுகள் அதிகமாக இருக்கும் கழகத்தை நம்பக் கூடாதென்றும் பேசியிருக்கிறார்.

இன்று காங்கிரஸ்காரர்கள் நமது கழகத்தில் அதிகம் வாலிபர்கள் இருக்கிறார்கள், வாலிபர் அதிகம் பேர்கள் கழகத்தில் பணியாற்றுகிறார்கள் என்று எண்ணி, பல குண்டர்களையும், தகுதியற்றவர்களையும் காங்கிரசில் சேர்த்து நம்மைத் தாக்குகிறார்கள். பல பெரியவர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் நம்மை ஆபாசமாகத் தாக்கி கழகத்தை ஒழிக்கப் பார்க்கிறார்கள்.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஓ வி. அழகேசனை நினைக்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது. பல சமயங்களில் நமது

(10-ம் பக்கம் பார்க்க)

தேர்தல் நிதி சேர்க்க தீவிரமாகி விட்டனர் அமைச்சர்கள்!

(கருணாநிதி பேச்சு)
(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்மார்கள் தங்களது முக வாய்க் கட்டையில் விரலை வைத்து அதிசயமான காரியத்தைப் பற்றிப் பேசுவார்கள்.

அதுபோலவே நானும் எனது மூகவாய்க் கட்டையில் கையை வைத்து இந்த அதிசயமனிதரான அழகேசனை எப்படி மந்திரியாக நியமித்தார்கள் என்று நினைக்கிறேன்,

இன்று இந்த அழகேசன் பொறுத்தமற்ற முறையில் எந்த இடமானாலும் எந்தக் கூட்டமானாலும் நம்மைத் தாக்குவதையே தனது தொழிலாக வைத்திருக்கிறார்.

சமீபத்தில் கடற்கரையில் சினிமா நடிகரைப் பாராட்டக் கூடிய ஒரு கூட்டத்தில் சம்மந்தமில்லாது. அங்கு பேச வேண்டியதை விட்டு விட்டு நம்மைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார்.

தென்னகம் தேய்கிறதென்று இந்தக் கழகத்தார் கூறிவருகிறார்கள். இன்று இதைக் கண்டாவது நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியதோடு நம்மைத் தேய்மதியாளர்கள் என்றும் நாம் அழிந்து வருகிறோம் என்றும் கூறியிருக்கிறார்.

நாமும், நமது கொள்கைகளும் வளர்பிறை போல் வளர்ந்து வருகிறது நமது கொள்கைகள் புகாத இடமெல்லாம் புகுந்துவலுப் பெற்று வருகிறது. ஆனால் நம்மைத்தேய் மதியினாகள் என்று கூறும் இவர்களை என்னென்று கூறுவது. இவர்களை, அம்மாவாசைகள் என்று தான் நாம் எண்ண வேண்டும் நாம் வளர்ச்சியுற்று வருவதை உணர்ந்த அமைசசர்கள் இன்று நிலைகுலைந்து அடுத்த தேர்தலில் வெற்றிபெறுவதற்கான காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். தேர்தலுக்குப் பணம் சேர்க்கும் பணியில் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

முதலமைச்சர் காமரசரும், நிதியமைச்சர் சுப்ரமணியமும் இந்தப் பணியில் மிகவும் மரமாக ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

நிதியமைச்சர் சுப்ரமணியம் சமீபததில் காங்கிரசை வலுப் படுத்தவும், நிதி சேர்ப்பதற்காகவும் ஒரு கூட்டம் கூட்டினார். சுமார் 300 பேருககு அழைப்பு அனுப்பினார். 250 பேர்கள் வந்தார்கள். அவர்கள் பணக்காரர்கள், ஆலை சொந்தக்காரர்,கள் வியாபாரிகள் அவர்களிடம் நிதியமைச்சர் கூறியிருக்கிறார், அடுத்த தேர்தலில் காங்கிரஸ் பதவிக்கு வரவேண்டும் அதற்காக நீங்களெல்லாம் உதவி செய்ய வேண்டும் காங்கிரஸ் வெற்றி பெற்றால் தான் நீங்கள் வாழ முடியும் அதற்காக உங்கள் உதவியை எதிர்ப் பார்க்கிறோம் என்று கேட்டிருக்கிறார்.

அதே போலவே முதலமைச்சர் காமராசாரும் மதுரையில் பல பணக்காரர்களை அழைத்து கூட்டம் கூட்டி, காங்கிரசை ஆதரிக்க வேண்டுமென்றும், காங்கிரஸ் வலுப்பெற உதவ வேண்டுமென்றும், காங்கிரஸ தேர்தலில் வெற்றி பெற வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

ஒவ்வொரு தெருவிலும், ஒவ்வொரு சந்து மூலைகளிலும் "காங்கிரஸ் அபிமானிகள்" சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும் அந்த சங்கத்தின் மூலம் காங்கிரஸ் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான பணிகளைப் புரிய வேண்டுமென்றும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கான செலவுகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

இதையெல்லாம் பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும் ஏன் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது நாம் வளர்ந்திருக்கிறோம் அவர்கள் தேய்கிறார்களென்பதை அறிவிக்கவில்லையா?

மற்றும் அந்த காங்கிரஸ் அபிமானிகள் சங்கத்தில் சேர்வோர் காங்கிரஸ் அங்கத்திலர்களாக இருக்க வேண்டியதில்லையாம். கதர்கட்ட வேண்டியதில்லையாம் அபிமானிகளாக இருந்தால் போதுமாம். என்ன பரிதாப நிலை அவர்களுக்கு.

நாம் பழைய ராஜக்கள் சரித்திரத்தைப் படித்திருக்கிறோம், அவர்களுக்கு "பட்டபகரிஷிகள்" என்று சொல்லக் கூடிய உரிமை பெற்ற மனைவிகள் பலர் இருப்பார்கள். அவர்களுக்குத் தாலி கட்டியிருப்பார்கள் அது தவிர "அபிமானப் பெண்கள்" என்று ஏராளமானவர்களை சேர்த்து வைப்பார்கள்.

அவர்களுக்குத் தாலி இருக்காது. அவர்கள் அபிமானத்துக்காக இருப்பார்கள்,

அது போல இன்று காங்கிரஸ் ராஜாக்கள் தங்களுக்கு அபிமானிகளைத் தேடுகிறார்கள். அவர்கள் காங்கிரசில் சேர வேண்டியதில்லையாம், கதர் என்ற தாலி வேண்டியதில்லையாம். இது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

இன்னும் ஒரு அதிசயத்தையும், எங்கும் நடக்காததையும், கூற ஆசைப்படுகிறேன். அந்தக் கூட்டத்தில் நமது முதலமைச்சர் காமராசர் ஒன்னேகால் மணி நேரம் பேசினாராம், என்ன அதிசயம் சட்டமன்றத்தில் 5 நிமிடம் கூட பேச முடியாதவர் ஒன்னேகால் மணி நேரம் பேசினாராம்

அந்தக் கூட்டத்தில் நமது முதலமைச்சர் காமராசர் பேசியிருக்கிறார்,

என்னைத் தாறுமாருகப் பேசுகிறார்கள், கேவலமாகப் பேசுகிறார்கள்—என்னைப் பற்றி இழிவாகப் பேசுகிறார்கள், இந்த கழகத்தார். அவர்கள் தலைவர்கள் போக்கு மிகவும் மோசமாக இருககிறதென்று பேசி இருக்கிறார்.

அறிஞர் அண்ணா அவர்களோ, நாவலர் அவர்களோ, நானோ அவரை எங்கே, எந்த இடத்தில் கேவலாமாகப் பேசியிருக்கிறோம் கூற முடியுமா? தனிப்பட்ட முறையில் என்னைத் தாக்குகிறார்கள் என்று பேசியிருக்கிறார் அப்படி எங்கும் பேசியதில்லை. வேண்டுமானால் சட்டமன்றத்தில் இவர் பேசுவதில்லை என்று கூறியிருப்போம்,

அதுவன்றி அவர் தலையில் மயிர் முளைக்கவில்லை. என்றோமா? மூக்கு நீளம் என்றோமா அல்லது வேறு என்ன தவறான முறையில் பேசினோம், சொல்லட்டுமே வீணாகப் பொய்யான வார்த்தைகள் சொல்ல வேண்டாம்.

வேண்டுமானால் தலைக்குள் இருக்க வேண்டியது இல்லை என்று மட்டும் கூறியிருப்போம்.

திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எவரையும் தனிப்பட்ட முறையில் தாககுபவர்களல்ல. அவர்கள் கண்ணியத்தையும், கடமையையும் மறக்கமாட்டார்கள்,

இன்று காங்கிரஸ்தான் சாமான்யமாக ரோட்டில் திரிந்தவர்களையெல்லாம் காவாடிகளாகத் திரிந்தவர்களை யெல்லாம். மூன்றும் தரம், நாலாந் தரம் ஆட்களையெல்லாம். மேடையில் பேச வைத்து நமது ஒப்பற்ற தலைவர்களைத் தாக்கி வருகிறார்கள், பொறுப்பு வாய்ந்த முதலமைச்சர் கூறுகிறார். நாம் தனிப்பட்ட முறையில் தாக்குகிறோமென்று.

சமீபத்தில் திருத்தணி தமிழகத்தில் சேர்ந்ததை முன்னிட்டு திருத்தணியில் தமிழரசு கழகத்தாரால் வெற்றிவிழா கொண்டாப்பட்டது. இதில காங்கிரஸ் அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள் திருத்தனி தமிழகத்தோடு சேர வேண்டுமென்று எல்லைப் போராட்டம் நடந்த போது முன்னேற்றக் கழகம் கலந்து கொண்டது. தமிழரசு கழக தொண்டர்களும் திராவிட முன்னேறறக் கழகத் தொண்டர்களும் போலிசாரால் தாக்கப்பட்டார்கள். பலரை கைது செய்தார்கள் அதில் வடாற்காடு மாவட்ட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் எ. எல், சி. கிருஷ்ணசாமியும் கலந்திருந்தார். ஆனால் இன்று அன்று அடக்கு முறைக்கு தூபம் போட்ட காங்கிரஸ் அமைச்சர்கள் வெற்றி விழாவுக்கு அழைக்கப்பட்டார்கள். ஆனால் அன்று போராட்டத்தில் ஈடுபட்டு தொல்லைகளான நமது கழகத்தை வெற்றி விழாக் கொண்டாட்டத்திற்கு அழைக்கவில்லை,

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. திருத்தணியில அடிபட்ட கழகத் தோழர்களைப் பார்ப்பதற்கு நானும், அறிஞர் அண்ணா அவர்களும், துணைப பொதுச் செயலாளர் என். வி. நடராசனும் சென்னையிலிருந்து சென்று பார்த்தோம்.

ஆனால் இன்று வெற்றிவிழாக் கொணடாடும் போது நமக்கு அழைப்பில்லை. காங்கிரஸ் அமைச்சர்களுடன் சேர்ந்து கொண்டாடுகிறார்கள்.

நண்பர் மா. பொ. சிவஞானம் அவாகள் இன்று அரசியலில் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக எதை எதையோ செய்து பார்க்கிறார் அவர் அப்படிச் செய்வதில் நமக்குக் கவலையில்லை. ஆனால் வெற்றி விழா என்ற பெயரால் நம்மைத் தாக்க ஆரம்பித்திருக்கிறார். இது காங்கிரஸ் அமைச்சர்களிடம் நல்ல பிள்ளையாவதற்காக நம்மைத் தாக்குகிறார் என்றே தெரிகிறது.

திருத்தணியில் பேசிய சிவஞானம் "ஒரு கட்சியைத் தவிர மற்ற கட்சிகள் இந்த விழாவில் ஒன்று சேர்ந்திருக்கிறது" என்று பேசினார் இது நம்மை மனதில் வைத்தே பேசுகிறார்.

இவர் என்று நம்மை அழைத்தால் நாம் போகாமலிருந்தோம்

அன்று முற்போக்கு கட்சிகளெல்லாம் சேர்ந்து தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று நடைபெற்ற போராட்டத்தில் நாமும் தமிழரசுக் கழகமும் சேர்ந்து பணியாற்றினோம்.

இது போல பல போராட்டங்களில் நம்மோடு சேர்ந்திருந்த தமிழரசு கழகத் தலைவர் இன்று சொல்லுகிறார் "கருமாதிக்" கட்சியை இந்தக் கல்யாண விழாவில் அழைக்கவில்லை" என்று இது வரை எதிலும் நம்முடன் ஒன்று சேர்ந்திருந்த சிவஞானம் இன்று நம்மைக் "கருமாதிக் கட்சி" என்கிறார், இவர் அப்படிக் கூறுவதற்காக நாம் கவலைப்படவில்லை. அதனால் நமக்குக் கேடும் விளைவித்துவிடாது. ஆனால் சிவஞானத்தின் நேர்மை— அரசியல் பண்பு இவைகளை மக்கள் உணர்ந்து கொள்ளும் தன்மையை மக்கள் உணரும் நிலைவந்து விட்டது.

இவர் தாககி பேசினால் காங்கிரஸ் அமைச்சர்கள் இவரைத் தட்டிக்கொடுக்க வேண்டு மென்று நினைப்பாலும், அவர்கள் புன்னகையைப் பெற வேண்டுமென்று நோக்காலும் "சிவஞானமும், கழகத்தைத் தாக்குகிறார்" என்று பாராட்ட வேண்டு மென்று எண்ணத்தாலுமே அவ்வாறு பேசியிருக்கிறார்!

அந்த விழாவில் பேசிய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் "கண்பர் ம. பொ. சிவஞானம் அவர்கள் காங்கிரசில் வந்து சேர வேண்டுமென்று அழைக்கிறேன்" என்று சூசகமாக அழைக்கிறார்.

அதற்கு சிவஞானம் "நான் காங்கிரசில் சேர யோசித்து முடிவு செய்கிறேன், நான் காங்கிரசிற்குத் துரோகியல்ல" என்று மழுபபலுடன் பதில் சொல்லியிருக்கிறார். இதில் பல ரகசியங்கள் இருக்கிறது.

நான் நினைக்கிறேன் இங்கிருந்தே போகும் போதே மந்திரியும், சிவஞானமும் பேசிக் கொண்டு போயிருப்பார்கள். என்று "நீங்கள் அழைப்பது போன்று அழையுங்கள், நான் அது பற்றி யோசிக்கிறேன் என்று பதில் சொல்லுகிறேன்" என்று நன்றாக யோசிக்கட்டும், அரசியலில் இடம் தேடி தலைவர் அலைபவர்களுக்கு — காங்கிரஸ்

(11ம் பக்கம் பார்க்க)

நமக்கு வழி காட்ட அண்ணா இருக்கிறார்—அவர் வழி நடப்போம்!

(கருணாநிதி பேச்சு)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களுக்கு நல்லவர்களாக நடக்க வேண்டுமென்பவர்களுக்கு—கொள்கையற்றவர்களுக்கு இந்த நிலைமைத் தவிர வேறு வேறு என்ன ஏற்படும்.

நண்பர் சிவஞானம் கூறுகிறார் நம்மைப் பார்த்து கருமாதி செய்பவர்கள் என்று. காங்கிரசுக்குக் கருமாதி செய்யவே அந்த போகப் போகிறார்.

வெற்றிவிழா கொண்டாடுகிறவர் நம்மை ஏன் தாக்க வேண்டும்.

இன்று இந்த மாநில அமைச்சர்களும், காங்கிரஸ் தலைவர்களும், அவர்களது பாதம் தாங்கிகளும் நமது கழகத்தையும், நம்மையும் சினிமாக் கட்சியென்றும், சினிமாக்காரர்களைக் கொண்டு வளர்கிறோம் என்று தூற்றி வருகிறார்கள். ஆனால் இன்று அவர்கள் செய்வதென்ன? மந்திரி பக்தவத்சலமும், மந்திரி சுப்பிரமணியமும், மந்திரி வெங்கட்டராமனும் சினிமாக்காரர்கள் பின்னாலேயே சுற்றுகிறார்கள் அவர்களது புகழ் பாடுகிறார்கள். அவர்களை அரவணைக்கிறார்கள். சினிமாப்பட வெற்றிவிழாக்களில் கலந்து கொள்கிறார்கள், சினிமாப்படம் பிடிக்கும் இயந்திரங்களை முடுக்குகிறார்கள் சினிமாக்காரர்களைத் தங்கள் கூட்டங்களுக்கு அழைத்துப் பேசச் செய்கிறார்கள். அரசியலில் சினிமாவைக் கலக்கக் கூடாதென்று கூறிக் கொண்டே அவர்கள் அதைச் செய்து பார்க்கிறார்கள்.

இன்று நமது கழகம் வளர்ந்திருப்பது சினிமாக்காரர்கள் நம்முடன் இருப்பதாலேயே என்று தப்புக் கணக்கு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நமது வளர்ச்சியின் உண்மையை அறியாததாலேயே. இப்படி நினைக்கிறார்கள். இதனால் அவர்கள் ஏமாந்து போகத்தான் போகிறார்கள்.

இன்று நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும், நண்பர்கள் ஆசைத்தம்பி, கண்ணதாசன், நான் சினிமாப்படத்தில் எழுதுவதாலும், நமது நண்பர்களான புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனும், நடிப்பிசை புலவர் கே. ஆர், ராமசாமி லட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி நாராயணசாமி போன்றவர்கள் சினிமாப் படத்தில் நடித்துப் புகழ் பெற்று வருவதாலுமே நம் கழகம் வளர்ந்து வருகிறதென்றும், நம்மை மக்கள் ஆதரிக்கிறார்களென்றும் நினைக்கிறார்கள் அப்படியானால், நாடக உலகிலும் சினிமாவிலும் புகழ்பெற்ற கிட்டப்பா, செல்லப்பா, தியாகராஜ பாகவதர், கே.பி, சுந்தராம்பாள் போன்ற பலரை உங்களுடன் சேர்த்துப் பார்த்தீர்களே. ஏன் உங்கள் கட்சி வளரவில்லை.

இப்பொழுதும் பல சினிமா நடிகர்களையும் நாடக நடிகர்களை உங்களுடன் சேர்த்துப் பார்க்கிறீர்களே அப்படியிருந்தும் ஏன் உங்கள் கட்சி வளரவில்லை.

வெறும் சினிமாக்காரர்களும், நடிகர்களும் சேர்வதால் மட்டும் ஒரு கட்சி வளராது. அதனுடைய லட்சியத்தாலும். கொள்கை உரத்தாலும், தியாகத்தாலும், அது ஆற்றும் பணியாலுமே ஒரு கட்சி வளர்ச்சியடையும்

திராவிட நாடு விடுதலை பெற வேண்டுமென்ற ஆர்வம், எண்ணம், ஆசை பிறந்து விட்டது! அதைச் சட்ட மன்றத்திலும் செய்கிறோம், கலைத்துறையிலும் ஆற்றி வருகிறோம் மக்கள் மன்றத்திலும் ஆற்றி வருகிறோம். மக்கள் எங்கள் பணிக்கு ஆதரவு தருகிறார்கள் எங்களை நம்புகிறார்கள் சினிமா நடிகர்கள் எங்களுடன் இருப்பதாலோ, படத்திற்கு கதை எழுதுவதாலோ நாங்கள் வளரவில்லை! பலதுறைகளிலும் எங்கள் கொள்கை வளர்ந்து வருகிறது.

இன்று நமது நாட்டிற்கு வந்து போன அரபி நாட்டுத் தலைவர் நாசர் ஒரு சினிப்பட எழுத்தாளர். அவர் சமீபத்தில் ஒரு படத்திற்குக் கதை எழுதியிருக்கிறார் அந்தப் படத்தின் பெயர் "விடுதலைக்காக" என்பதாகும்

அந்தப் படம் விரைவில் வெளிவரப் போகிறது. "கதை-வசனம் நாசர்" என்று போடப்படும் போது கைதட்டவும் போகிறீர்கள். அந்த நாசருக்கு இன்று மகத்தான வரவேற்புக் கொடுக்கப்படுகிறது. அவர் பின்னால் காங்கிரஸ் அமைச்சர்கள் சுற்றித் திரிகிறார்கள். நம்மை சினிமாவிற்குக் கதை எழுதிப் பிழைக்கிறவர்கள் என்று தூற்றித் திரிகிற முதலமைச்சர் காமராசரும், காங்கிரஸ்காரர்களும் நாசரைக் கேட்டிருக்கலாமே ஏன் சினிமாவிற்குக் கதை எழுதுகிறீர்களென்று

இவர்களால் கேட்க முடியவில்லை என்றால் நமது நிதியமைச்சர் சுப்பிரமணியமாவது கேட்டிருக்கலாமே? அவருக்கும் அந்த தைரியம் வரவில்லையானால் பிரதமர் நேரு மூலம் கேட்டிருக்கலாமே.

மலேயே பிரதமா சுங்க் அப்துல் ரஹிமான் கூட சினிமாவிற்குக் கதை எழுதுகிறார்.

அப்படி இருக்கும் போது நாங்கள் கதை எழுதுவதில் என்ன தவறு.

கதை எழுதுவது தொழில் தொழில் ஈடுபடுகிறவர்கள் ஓய்வு நேரங்களில் அரசியலில் ஈடுபடுகிறார்கள், மளிகைக் கடையில் வேலை செய்பவர்கள். ஜவுளிக் கடையில் வேலை செய்கிறவர்கள். தையல் தொழில் செய்பவர்கள் ஆலையில் வேலை செய்பவர்கள், இன்னும் பலவித தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் அரசியலில் ஈடுபடுகிறார்கள் அது தவறல்லவே. அவர்களெல்லாம் அரசியலில் ஈடுபடக் கூடாதென்று கூறுவது நியமல்லவே.

இன்று கலைத் துறையில் ஈடுபட்டிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசியல் போராட்டம் வரும் போது ஒடிப் பதுங்கி விடுகிறவர்களல்லவே கழகம் கட்டளை பிறப்பித்தால் ஓடோடி வந்து போராட்டத்தில் குதிப்பவர்களாயிற்றே. கழகம் நடத்திய எந்தப் போராட்டத்தில் அவர்கள் ஓடினார்கள். மூக்காடிட்டு மூலையில் பதுங்கினார்கள் கழகத்திலிருக்கு வீரர்கள் அவ்விதம் செய்ய மாட்டார்கள்.

நான் உறுதியாகக் கூறுகிறேன். நாங்கள் படத் தொழில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது நமது தலைவர்கள் போராட்ட அறிவிப்பு கொடுத்தால் பட முதலாளியிடம் அறிவிப்பு கொடுத்து விட்டு மூட்டை முடிச்சுடன் போராட்டத்திற்கு வந்து விடுவார்கள் இதை யறியாத அரசியல் கபோதிகள், அரசியல் சூனயர்கள் அப்பட்டமாகப் பழி சுமத்துகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருக்கும் அனைவரும் போர் குணம் படைத்தவர்கள் போருக்கு அஞ்சாதவர்கள். பிறவி சூன்யர்கள் நம்மைப் பற்றித் தாக்கி வருகிறார்கள். அது பற்றி நமக்குக கவலை இல்லை!

நமது கழகம் ஜனநாயகப் பண்பில் வளர்ந்து வருகிறது. அதை யாராலும் அழிக்க முடியாது.

சென்னை நகரில் தினம், தினம் கூட்டங்கள் நடந்து கொண்டு வருகிறது மக்கள் ஏராளமாக கூடி வருகிறார்கள்.

இந்தக் கூட்டத்திற்கு நான் வரும் போது சிறிது குறைவாகக் கூட்டமிருந்தது. இப்போது கூட்டம் அதிகமாக இருக்கிறது.

நம்முடைய கழகத்தில் சேர்ந்திருப்பவர்கள் சாதாரண முறையில் வாழ்பவர்கள். வாழ்பவர்கள். வாழ்க்கை வசதி மிகவும் குறைவான நிலையிலிருப்பவர்கள் அவர்களெல்லாம் மாலை நேரத்தில் 'வீட்டிற்கு வேண்டிய வேலைகளையெல்லாம் செய்துவிட்டு கூட்டங்களுக்கு வருவார்கள். ஆறு மணிக்கு, கூட்டம் நடப்பதாக இருந்தால் 7மணிக்குத்தான் வருவார்கள் "நமது கருணாநிதி 7 மணிக்கு மேல் தான் பேசுவார்கள், நாம் தாமதமாகப் போகலாம்!"என்று'

நான் நன்கு உணர்வேன் நமது மக்கள் நிலை. அவர்கள் தங்கள் குடும்பத்திற்கு அன்றாடம் தேவைக்கான வேலைகளைச் செய்து விட்டு 7 மணிக்கு மேல் தான் வருவார்களென்று, அதே போல் தான் நமது கழகக் கூட்டங்களில் பேசுபவர்களெல்லாம் எண்ணுவார்கள். நீங்கள் எங்களை உணர்திருக்கிறீர்கள். நாங்கள் உங்களை உணர்ந்திருக்கிறோம். அதனால் தான் நாம் வளர்கிறோம், நமது கழகமும் வளர்ந்திருக்கின்றது,

நமது கொள்கைகளும் லட்சியங்களும் இன்று யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு எங்கணும் பரவி வருகிறது.

நாம் திராவிடர். நமது நாடு திராவிட நாடு, நமது இனம் திராவிட இனம் என்பதை யாவரும் உணர்ந்து விட்டார்கள்.

நமது திட்டங்களை—நமது எண்ணங்களை யாவரும் பின்பற்றி வருகிறார்கள், நமது கொள்கைகள் பதியாத உள்ளங்களிலெல்லாம் பதிந்து விட்டது. காடு மேடு பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி வருகிறது. குக்கிராமங்களிலெல்லாம் பரவி வருகிறது.

அடிமைப் பட்டிருக்கும் பொன்னாடாம் நாடன திராவிடத்தை மீட்க வேண்டும், நமது மக்களின் வறுமை — அடிமை வாழ்வு நீங்க வேண்டும் என்ற உணர்ச்சி எங்கும் பரவி வருகிறது.

ஆனால் பலருக்குச் சந்தேகம் ஏற்பட்டு வருகிறது

இது நிறைவேறுமா? திராவிடநாடு கிடைக்குமா? திராவிடர்களுக்கு நல்வாழ்வு கிடைக்குமா என்று தங்கள் பலஹீனத்தால் எண்ணுகிறார்கள்.

நம்முடைய கட்டுப்பாட்டால் நமது பணியால், நமது ஒற்றுமையால், நமது தியாகத்தால் அவர்களது எண்ணம் மாறும்படி செய்வோம்,

நமக்கெல்லாம் வழிகாட்டியாக—ஆசானாக நுங்கம்பாக்கம் அவன்யூ ரோட்டில் 9ம் நம்பர் வீட்டில் ஒரு உருவம் இருக்கிறது, அந்த உருவம் மாசற்ற தங்கம், மக்களெல்லாம் மதிக்கும் தனிப் பெரும் தலைவர். ஆகவே உங்களையெல்லாம் அவரது கட்டளைகளைத் தாங்கி நமது கொள்கைகள், லட்சியங்கள் வளர பாடுபடவும், கழகப் பணிகளுக்கு ஒத்துழைக்கவும். கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

(தலையங்கம் 2ம் பக்கத் தொடர்ச்சி)

நஷ்ட ஈடுதராமல் 'உபரி நிலங்களை எடுத்துக் கொண்டு ஏழைகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யும் தைரியம் இந்த சர்க்காருக்கு இன்று மட்டுமல்ல, என்றுமே ஏற்படாது! காரணம் பணக்காரர்களின் தயவு இருந்தால் தான் இந்த சர்க்கார் உயிர் வாழ முடியும்! எனவே இத்தகைய புரட்சி திட்டத்தை செய்ய முன் வராவிட்டாலும் ஏழைகளுக்கு வகையாவது செய்ய முன் வர வேண்டும்!

மொத்தத்தில கூற வேண்டுமானால் இந்த சட்டம் பெருமளவு நன்மை பயக்கும் என்று கூற முடியாது! என்றாலும இந்த சட்டத்தையாவது கொண்டு வந்தார்களே என்று மகிழ்ந்து சென்னை மாநில சர்க்காரை நாம் பாராட்டத்தான் வேண்டும்!

நிலம் விநியோகிக்கும் முறையில் நல்ல நெறியோடும், நீதியோடும், ஏழைகளுக்கு ஏற்ற வசதியோடும் நடந்து கொள்ள வேண்டும என்று கூறி சென்னை சர்க்காரையும் கனம் மாணிகக வேலரையும் நாம் பாராட்டுகிறோம்.

Registered as a Newspaper in CEYLON இலங்கையில் 20 சதம்
Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

என் வட்டத்திற்கு ஏராளமான பணி செய்துள்ளேன்!

சென்னை 58-வது வட்டம் லாட் கோவிந்தாஸ் தெருவில் (மிட்லண்ட் தியேட்டரின் பின்புறம்) மறைந்த மாவீரன், கே. வி. கே. சாமி நினைவு மன்ற மூன்றுவது ஆண்டு விழாவும், நகர உறுப்பினர் திரு. சிட்டிபாபு அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும் 7 4-60ம் நாள் எம். கே. சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அது சமயம் நகர மன்ற உறுப்பினர் திரு, சிட்டிபாபு அவர்கள் பேசியதாவது:—

அன்புமிக்க தலைவர் அவர்களே! கலைஞர் அவர்களே நண்பர்களே! தாய்மார்களே!!

கடந்த நகர மன்றத் தேர்தலில் என்னை எதிர்த்து ஏழு பேர் நின்றனர். நான் எட்டாவது பேராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நின்றேன். என்னை எதிர்த்து நின்ற ஏழு பேர்களும் பெரியவர்கள்—செல்வாக்குப் படைத்தவர்கள்— பணக்காரர்கள். நானோ சிறியவன், பணமில்லாதவன் நகரமன்றத்திலுள்ள 45 பேர்களில் நான் தான் சிறியவன் இந்த வட்டத்திலுள்ள பெருங்குடி மக்கள், யார நகர மன்றத்திற்குச் சென்றால், நம் குறைகளை எடுத்துக் கூறி நம்துயர் துடைப்பார்கள் என்று சிந்தித்து இறுதியில், சிறியவனை சிட்டிபாபுவே சீரிய பணிகள் செய்வானென்று என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்! இந்த வட்டத்தில் அரும்பணி ஆற்றி வந்த காலம் சென்ற பி. பாலசுப்ரமணியம் தொண்டே என் வெற்றிக்குக் காரணமாகும் என்னைத் தேர்ந்தெடுத்த இந்த வட்டத்து பெருங்குடியாளருக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்த வட்டத்தில் குடியிருந்துமக்களுக்கு தொண்டு செய்து பழகி வந்தவர் திரு பி. பாலசுப்ரமணியம் அவர்கள் நீதிக்கட்சியிலிருந்து மக்கள் வாழ்விற்காக அரும் பணியாற்றியவர், ஆகவே இந்த வட்டத்தின் பெயராகிய புதுப்பாககத்திற்கு பதிலாக, அவரது நினைவிற்காக இந்த வட்டத்திற்கு பாலசுப்ரமணியம் நகர் என்றும், அவர் வசித்து வந்த வீதிககு பாலசுப்ரமணியம் வீதி என்றும் பெயரிட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் செய்து சென்னைச் சர்க்காருக்கு அனுப்பியுள்ளோம்.

நகர மன்றத்தில் சாதித்ததைப்பற்றி சிட்டிபாபு விளக்கம்

இங்குள்ள பூங்காவிற்கு பாலசுப்ரமணியம பூங்கா என்று பெயரிட்டாகி விட்டது.

இந்த வட்டத்தில் 60 ஆண்டுகளுககு முன்லை தண்ணீர் குழாய்ப் போடப்பட்டது. 4 அங்குலம் உள்ள குழாயில் தண்ணீர் வந்தால் இந்த வட்டத்தில் உள்ள மக்களுக்குப் போதுமா? தற்போதைய சூழ்நிலையில் இங்குள்ள மககளுககு தண்ணீர் வசதிப் போதவில்லை யென்பதற்காகவே 21 குழாய்கள் இந்த வட்டத்தில் அமைத்துள்ளேன். அதுவுமின்றி கிணற்றிலிருந்து 1500ரூபாய் செலவில மின்விசைப் பம்பு மூலமாகத் தண்ணீர் வசதி செய்ய ஏற்பாடு செய்துள்ளேன் இங்குள்ள பூங்காவில் ரேடியோ ஒன்று வைக்க ஏற்பாடு செய்துவிட்டேன். மின்சார வசதிக் கிடைத்ததும் ஒருசில நாட்களில் ரேடியோ பாட ஆரம்பித்துவிடும்.

அதற்கு முன் இந்த பூங்கா ஒரே இருளாக இருந்தது அதை நீக்குவதற்கு இந்த பூங்காவில் 5 மெர்குரி விளக்குகள் போடவும், 5 பம்புகள் போடவும் ஏற்பாடும் செய்துள்ளேன்.

நடைப்பாதை வசதியின்றி சாலைகள் குண்டும் குழியுமாக காட்சியளித்தது. நடைபாதையை 18000 ரூ செலவில் செப்பனிட ஏற்பாடும் செய்துள்ளேன். என்னைச் சுற்றிலும் காங்கிரஸ்காரர்களதான் இருக்கிறார்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் காங்கிரஸ் காரர்களதான்—மூன்றுப் பக்கமும் காங்கிரஸ்காரர்கள்தான்.

அவர்கள் வட்டத்தில் மழை பெய்தால் அந்த நீர் எல்லாம் என் வட்டத்தில் தான் வந்து விழுகிறது. அதனால் என் வட்டத்தில் தண்ணீர் தேங்கி கொசுக்கள் உற்பத்தியாகிறது இண்டியன் எக்ஸ்பிரஸ் எஸ்டேட்டிலிருந்து ஈரானி ஹோட்டல் வழியாக என் வட்டத்திற்கு வந்து கொண்டிருந்த கழிவு நீரை வெலிங்டன் சினிமாத் தியேட்டர் வழியாக போரிங் பம்பு மூலம் 56000 ரூ செலவில் கூவம நதியில் கொண்டு போய்விட ஏற்பாடு செய்துள்ளேன். என்னுடைய வட்டத்திற்கு சாசசடைக் கழிவு நீர் திட்டம் 4200 ரூ செலவில் அடுத்த மாதம் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறேன்.

மலஜலம் கழிப்பதற்கு கக்கூஸ் வசதியும் இல்லாமலிருக்கிறது. கக்கூஸ் கட்டுவதற்காக 9000 ரூபாய் செலவிட திட்டமிட்டுள்ளோம். நைனியப் பநாயக்கன் தெருவில் கக்கூஸ் கட்டப் போகிறேன், வெலிங்டன் தியேட்டரிலிருந்து இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் வரை 5000 ரூபாய் செலவில் இன்னும் 13 மெர்குரி லைட்டுகளும், 63, டியூப் லைட்டுகளும் போடுவதற்கு சென்னை சர்க்காருக்கு எழுதயனுப்பியுள்ளோம்.

பள்ளிக்கூடம் கட்டுவதற்கு இந்த திட்டத்தில் 29000 ரூபாய் ஒதுக்கியுள்ளோம், என் வட்டததில் உள்ள பள்ளிக்கூடத்தையும் மாநகராட்சி மன்றத்தில் சேர்த்து விட்டேன். என் வட்டத்தில் பெரிய பள்ளிக்கூடம் கட்ட 6000 ரூபாய் ஒதுக்கியுள்ளேன். என் வட்டத்தில் மருத்துவமனை கிடையாது. இந்த வட்டத்தில் தாய் சேய் நல விடுதி ஏற்படுத்த ஒரு இடத்தை குறிப்பிட்டு அந்த இடத்தில் தாய் சேய் நல விடுதி ஏற்படுத்த வாதாடினேன், அதன் பயனாக அதிகாரிகள் வந்து பார்வையிட்டு கூடிய விரைவில் செய்வதாக வாக்கு கொடுத்திருக்கிறார்கள். விளையாட்டு மைதானமும் நம் வட்டத்தில் இல்லை. ஒரு விளையாட்டு மைதானமும் தாய் சேய் நல விடுதியும் ஏற்படுத்த 86000 ரூபாய் ஒதுக்கியுள்ளோம் விளையாட்டு மைதானம் ஒன்று கூடிய விரைவில் ஏற்படுத்தக் கூடும்

இந்த வட்டம் சுமார் 30 ஆண்டுகளாக பிற்போக்கான வட்டமாகக் கருதி புறக்கணிக்கப்பட்டு வந்தது என்று முன்னாள் மேயர் ராமநாத ஐயரே தமது குறிப்பில் குறித்து வைததுள்ளார். அப்படியானால் இவ் வட்டம் எந்த நிலையில் இருந்திருக்கும் என்று சிறிது எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன், என்றும் மற்றும் நகர மன்றத்தில் அவர் செய்த, பல பணிகளைக் கூறி முடித்தார்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ்,
404 திருவல்லிக்கேணிஹைரோடு, சென்னை-5 அலுவலகம்: 1-35, வாணியர் தெரு. சென்னை-14.